உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்


e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

மலர்-6 இதழ்-176

மே 1-15 2024





## கும்பகோணத்தில் அன்னபிரசன்ன ஸ்தலம்

# குழந்தைகளின் சளிப்பிரச்சனை போக்கும் திங்களூர் சிவன்


e-magazine

# சிவனின் குணத்தை குறிக்கும் செற்கள்

சிவபெருமானை ஈசன், மகேஸ்வரன், ருத்ரன், மகாதேவன், சர்வேஸ்வரன்,பரமேஸ் வரன், ஈஸ்வரன் என பல பெயர்களில் அழைக்கிறோம். இவற்றில் பல திருநாமங் களுக்கு என்ன பொருள், ஏன் சிவனை இத் திருநாமத்தால் அழைக்கி றோம் என தெரியாமலேயே வணங்கிவருவோம்.



ஆனால்இந்தஒவ்வொரு திருநாமத்திற்கும் ஒவ்வொரு குணம் இருக்கிறது. இந்த ஒவ்வொரு திருநாமமும் சிவனின் பலவிதமான குணங்களை குறிக் கும் சொற்களால் உரு வானதாகும்.

# பலன் தரும் புதாஷ்டமி

அஷ்டமி நவமி தெரியும் புதனுக்குரிய ஒரு அஷ்டமி இருப்பது பலருக்கு தெரியாது, புதன்கிழமையும் அஷ்டமி திதியும் ஒன்றாக சேரும் நாளை புதாஷ்டமி என்று கூறுவார்கள், இந்நாள் சூரிய கிரஹணம் நிகழும் நாளுக்கு ஒப்பான நாளாக சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளனர்.




எனவே இந்த நாளில் நதியில் குளிப்பது, மந்திரஜபம் செய்வது, தானம் கொடுப்பது, ஆலயங்களில் தரிசனம் செய்வது போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும்.

சாதாரண நாட்களில் மேற்கண்டவற்றை செய்வதால் ஏற்படும் பலனைவிட இந்த புதாஷ்டமியில் செய்யும் செயலுக்கு பலன் அதிகம், அந்த அற்புத நாள் 01.05.2024 மற்றும் 15.05.2024 அன்று வருகிறது.

# மாதங்களில் சிறப்பு வாய்ந்தது பங்குனி மாதம்

தமிழ் மாதங்களில் கடைசி மாதமான பங்குனிக்கு பல்வேறு சிறப்பு இருக்கிறது. பொதுவாக இந்த பங்குனி முருகனுக்கு உகந்த மாதமாக இருந்தாலும், பங்குனி மாதத்தில் தான் முக்கிய தெய்வங்கள் தோன்றியதாக புராண இதிகாசங்கள் கூறுகின்றன.

பங்குனி மாதத்தில் வரும் உத்திர தினத்தில் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள்தோறும் சிறப்பான விழா கொண்டாடப்படுகிறது. குறிப்பாக பழநியில் பங்குனி உத்திரத்தன்று முருகப்பெருமானுக்கு கொடுமுடிக்குச் சென்று அங்கு பாயும் காவிரி நதியில் தீர்த்தம் எடுத்து வந்து விசேஷ அபிஷேகம் செய்யப்படுகிறது. இந்த நிகழ்வு ஆண்டுதோறும் பாய்ந்தோடி நாட்டிற்கு செழிப்பை தரும் காவிரியைப் பெருமைப்படுத்தும் நாளாகவே போற்றப்படுகிறது.




அதுமட்டுமின்றி, பார்க்கவ மஹரிஷியின் மகளாக மகாலட்சுமி, பார்கவி என்ற பெயரில் பூமியில் பிறந்த நாளும் பங்குனி உத்திர நாளில்தான். எனவே, இந்த நாள் லட்சுமி கடாட்சமாக விளங்குகிறது.

உத்திர நட்சத்திரத்தில் கூடியிருக்கும் சந்திரபகவான் இந்த நாளில் எந்த வித களங்கமுமின்றி காட்சி தருவான். அப்போது சந்திரனை வணங்கினால் குடும்ப வாழ்வு சிறப்படையும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

முருகப்பெருமான் வேடனாக மாறி மணம் புரிந்த வள்ளிப்பிராட்டி அவதரித்த நாளும் பங்குனி உத்திரநாளில்தான்.

உலகம் முழுவதும் பிரம்மச்சரிய கடவுளாக வணங்கப்படும் தர்ம சாஸ்தாவான ஸ்ரீ ஐயப்பன் உதித்ததும் பங்குனி உத்திர நாளில்தான்.

e-magazine
aanmeegamalar.com

# விநாயகரின் 10 பெயரின் அர்த்தங்கள்

விநாயகர் பொதுவான கடவுள், எந்த காரண காரியங்களை செய்தாலும் முதலில் விநாயகரை வணங்க வேண்டும் என்பது இந்து மத ஐதீகம்.

அந்த வகையில் அனைத்திற்குமான விநாயகரை 10 விதமான மூர்த்தங்களில் வழிபட்டால் மிகுந்த பலன் கிடைக்கும்.

தெய்வங்களுக்கு எல்லாம் தெய்வமாக விளங்கக் கூடிய அவருக்கு எத்தனையோ திருநாமங்கள் இருந்தாலும் பக்தர்கள் ஒரு சில பெயர்களைக் கொண்டே விநாயகப் பெருமானை அதிகம் போற்றி புகழ்கின்றனர். விநாயகரின் ஒவ்வொரு திருநாமத்திற்கும் ஒவ்வொரு பலனும், ஒவ்வொரு தனி அர்த்தமும் உள்ளது. இந்த பெயர்களைச் சொல்லி அழைக்கும் போது அதற்கான பலன்களும் நம்மை வந்தடைகிறது.

**மங்கள மூர்த்தி:**

மங்கள மூர்த்தி என்றால் மங்களை அருளும் தெய்வம் என்பது பொருள். இவரை வழிபட்டால் அனைத்து விதமான நலன்களும்கிடைக்கும்.

**ஏகந்தா:**

ஏகம் என்றால் ஒன்று. தந்தன் என்றால் தந்தத்தை உடையவர் என்று பொருள். ஏகந்தா என்றால் ஒன்றை கொம்பன் என்பது பொருள்.

**விநாயகா:**

விநாயகர் என்ற திருநாமம் அதிகமானவர்களால் அழைப்படும் திருநாமம் ஆகும். விநாயகர் என்றால் அனைத்து தடைகளையும் அகற்றுபவர் என்று பொருள்.



**கஜானனம்:**

கஜா என்றால் யானை என்று பொருள். கஜானனம் என்றால் யானை முக தெய்வம் என்று பொருள்.

**லம்போதரா:**

லம்பம் என்றால் பானை வயிறு, தொப்பை என்று பொருள். லம்போதரா என்றால் பெரிய வயிற்றை உடையவர் என்று பொருள்.

**விக்னஹர்தா:**

விக்னம் என்றால் தடை. ஹர்தா என்றால் அழிக்கக் கூடியவர் என்று பொருள். விக்னஹர்தா என்றால் வாழ்வில் உள்ள அனைத்து தடைகளையும் அகற்றக் கூடியவர் என்று பொருள்.

**கணதக்ஷாய:**

அனைத்து விதமான கணங்களுக்கும் தலைவன் அல்லது தெய்வம் என்று பொருள்.

**சித்தி விநாயகர்:**

சித்தி என்றால் வெற்றி. அனைத்து விதமான வெற்றிகளையும் அருளும் தெய்வம். வெற்றிகளுக்கு சொந்தக்காரர் என்று பொருள்.

**புத்தி விநாயகர்:**

புத்தி என்பது அறிவை, ஞானத்தை குறிப்பதாகும். ஞானத்தின் கடவுள் என்பதால் விநாயகருக்கு புத்தி விநாயகர் என்ற பெயரும் உண்டு.

**பூபதி:**

பூஎன்பது பூமியை குறிக்கும் சொல். பூமிக்குஅதிபதி, பூமிக்கே தெய்வம் என்பதால் விநாயகருக்கு பூபதி என்ற திருநாமம் உண்டு.

e-magazine
aanmeegamalar.com


# தியானம் மட்டும் முடிவல்ல

தியானம் மட்டுமே முடிவல்ல. தியானத்திற்கு அப்பால் பல முயற்சிகள் இருக்கின்றன. அத்தகைய முயற்சிகளுக்கு நம் மனதின் சங்கல்பமே அடித்தளமாக இருக்கிறது. ஒரு ஊருக்கு பயணம் செல்ல வேண்டும் என்று புறப்பட்டுச் செல்கிறோம் என்று வைத்துக் கொள்வோம், முதலில் பயணத்தின் தேவை, பிறகு பயணத்தின் நோக்கம், பிறகு முடிவான தீர்மானம், பிறகு பயணத்திற்குத் தயாராகுதல், அதற்குப் பிறகு பயணத்திற்கு கிளம்புதல் என்று முயற்சிகள் பல நிலைகளில் நிகழ்கின்றன.

அது போலவே தியானமும் அமைகிறது. ஆனால், தேவையும் நோக்கமும் இங்கே கவனிக்கப்படத்தக்கதாக இருக்கிறது. அதோடு கூட பயணத்தின் பாதையிலும் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும். இல்லையெனில் அது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிற கதையாகி விடும்.

உலகாய வாழ்வில் பல வகையான வெற்றிகளைப் பெறுவதற்கு தியானம் நிச்சயமாக பேருதவியாக இருக்கும் என்பது உண்மைதான். ஆனால், அந்த வெற்றியின் பயனாக நாம் நிரந்தரமான மன அமைதியையும், பூரணமான இன்பத்தையும் அடைந்து விடுவோமா என்று கேட்டால், இல்லையென்றுதான் சொல்ல முடியும். ஏனெனில் தியானம் என்பது பூரணத்துவத்தை அடைவதற்கான ஒரு யுக்தி. அந்த யுக்தியை நாம் உலகாயத்தில் பயன் படுத்தும் பொழுது, தியானம் வெற்றியடைந்தாலும், அதன் பயன் முழுமையடையாது. முழு ஆற்றலோடு இறங்கி வந்து, துன்பங்களை ஏற்படுத்தும், நிரந்தரமற்ற, நிலையாமை தன்மை உடைய, அற்ப விஷயங்களிதான் அந்த ஆற்றலை நாம் விரையம் செய்து கொண்டிருக்கிறோம். பிறகு எப்படி நிரந்தரமான ஆனந்தமும், மன அமைதியும் ஏற்படும் ?

இதற்கு உதாரணமாக அக்பர் என்ற அரசரின் வாழ்வில் நடந்த ஒரு சம்பத்தை கூறலாம். அக்பரின் அரச சபையில் தான்சேன் என்ற திறமையான பாடகர் ஒருவர் இருந்தார். இவர் ஹரிதாஸ் சுவாமி அவர்களின் சீடராவார். இந்த தான்சேன் என்பவர் பாடும் பொழுதெல்லாம் அக்பர் தன்னிலை மறந்து விடுவார். அந்த அளவுக்கு அவரது பாடல் மிகவும்



e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
Free e-book



Scan to Read aanmeegamalar Website

e-magazine
aanmeegamalar.com

இனிமையாக இருக்கும்.அரசர் தான்சேன் மீது மிகுந்த மரியாதையும், அன்பும் கொண்டிருந்தார். ஒரு நாள் மன்னர் நகர் வலம் வரும் பொழுது, தான்சேனையும் உடன் அழைத்துச் சென்றார். செல்கிற வழியில் தான்சேன் அவர்களின் குருவாகிய ஹரிதாஸ் சுவாமிகளின் இல்லம் இருந்தது. எனவே தான்சேன் அவர்கள் தன் குரு நாதரை வணங்கி ஆசி பெற்றுச் செல்லலாமே என்று அக்பரை அழைத்தார். மன்னரும் சம்மதிக்கவே, இருவரும் ஹரிதாஸ் சுவாமிகளின் இல்லத்திற்குச் செல்கிறார்கள்.

அங்கே அவர் இறைவனை நினைத்து மிக இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தார். இவர்கள் வந்ததைக் கூட அவர் கவனிக்கவில்லை. அந்த அளவுக்கு அவர் தன்னிலை மறந்து பாடிக் கொண்டிருந்தார். இசைப் பிரியரான அக்பர் ஹரிதாஸ் சுவாமிகளின் பாடலில் கட்டுண்டு, மெய் மறந்து போனார். ஒரு கட்டத்தில் அக்பர் தான்சேனிடம் உங்கள் பாடல்கள் மிகவும் உன்னத மானவைதாம். என்றாலும் உங்கள் குருநாதரின் அளவுக்கு உங்கள் பாடல் இல்லையே என்று கேட்டார்.



அதற்கு தான்சேன் என்ன சொன்னார் தெரியுமா ? அந்த பதில்தான் உங்களது கேள்விக்கும் பொருத்தமான பதிலாக இருக்கிறது. ‘‘மன்னா நான் உங்களை சந்தோசப்படுத்துவதற்காகப் பாடுகிறேன். என் முயற்சியில் சுயநலம் இருக்கிறது. ஆனால், என் குருநாதரோ இறைவனை நினைந்து, ஏங்கிப் பாடுகிறார். அவரிடத்தில் எந்த சுயநலமுமில்லை. ஒரு தாயைப் பிரிந்த குழந்தையின் நிலையில் நின்று கொண்டு, உண்மையான அன்போடு, ஏக்கத்தோடு பாடுகிறார். எனவே அவர் பாடலில் உண்மைத் தன்மையும், களங்கமற்ற அன்பும் வெளிப்படுகிறது.

இதனால்தான் எங்கள் இருவரின் பாடல்களின் தரமும் வேறுபடுகிறது என்றார். அக்பர் பிரமித்துப் போனார். இதுதான் உலகாய தியானத்திற்கும், ஆன்மீக தியானத்திற்கும் உள்ள வேறுபாடு. ஒளியா, இருளா? இன்பமா, துன்பமா? நிலையானதா, நிரந்தரமற்றதா? சிற்றின்மா, பேரின்பமா? எது வேண்டும் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். தியான முயற்சி ஒன்றுதான். நோக்கம் மாறும் பொழுது, பயனும் மாறி விடுகிறது.

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று பழமொழியின் பொருள் என்ன?



மாலறு நேயமும் மலிந்தவர் வேடமும் தான் அரன் எனத் தொழுமே என்கிறது சிவஞான போதம். உண்மை பக்தியுடன் சிவாலயம், சிவனடியார்களைத் தொழுதால் அறிவும், நல்வாழ்வும் கிட்டும் என்பது இதன் பொருள். நல்லறிவே மகிழ்ச்சியான வாழ்வின் அடித்தளம். இதனைத் தரும் ஆற்றல் ஆலய வழிபாட்டிற்கு மட்டுமே உண்டு.

ஊர்கள் தோறும் சிவ, விஷ்ணு கோயில்கள் எழுப்பப் பட்டு பூஜைகள் நடைபெறுகின்றன. வீட்டில் எவ்வளவு தான் ஜெபம்,ஹோமம், பூஜை செய்தாலும் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் தான் நிறைவு உண்டாகும். சித்தாந்தம் கூறும் இவ்வளவும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனும் ஒரே வரியில் கூறிவிட்டார் அவ்வைப் பிராட்டியார்.



# கோவில் கோபுரத்தில் ஆபாச சிலைகளா? அரண்டவன் கண்ணுக்கு பேயாகத்தான் தெரியும்

இந்த உலக வாழ்க்கையில் உள்ள எல்லா விஷயங் களுமே புனிதமானவை தான். எதையும் தவறாகச் செய்யும் போது அதன் புனிதம் போய் ஆபாசமாகி விடு கிறது. உதாரணமாக, நல்ல விஷயங்களைப் பேசினால் அது அர்த்தமுள்ள பேச்சு.

தீய வார்த்தைகளை உபயோகித்துப் பேசினால் அதுவே ஆபாச பேச்சாகி விடுகிறது. புனிதமான தாம்பத்ய உறவு இல்லையென்றால் குழந்தைகள் எப்படிப் பிறக்கும்? உலக இயக்கம் எப்படி நடக்கும்? உலக வாழ்க்கையில் மனிதன், மிருகம், செடி, கொடி, மரம்.. இப்படி உயிருள்ள எல்லாமே இனப் பெருக்கம் செய்ய வேண்டியது அவசியம்.

இந்த நோக்கில் பார்த்தால் தாம்பத்ய உறவு என்பது திருக்கோயில் சிலையாக வடிக்கக் கூடிய அளவிற்குப் புனிதத்தன்மை வாய்ந்தது.

சினிமா, நாடகம், "டிவி' போன்றவை வந்து இந்தப்புனிதத்தை ஆபாசமாக்குவதற்கு முன்பு, கோயில் சிற்பங்களில், இதனைக் கண்டு புனிதமாக வாழும் நெறியை மனித இனம் உணர்ந்து கொள்ளவே இப்படிப்பட்ட சிற்பங்களை வடித்தார்கள். மேற்கொண்டு ஆராய்ந்து இதனை ஆபாசமாக்க கூடாது.

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.


தொடர்பு எண்: 9444228203

இ–மெயில் முகவரி:

aanmeegamalar@gmail.com




# தமிழகத்தில் வாசம் செய்யும் பெருமாள் அமானுஷ்ய பாதிப்பை போக்கும் அற்புதம்



திருப்பதியில் மட்டும்தான் பெருமாள் வாசம் செய்கிறார் என்று பலரும் கூறுவார்கள். ஆனால் தமிழகத்தின் குணசீலத்திலும் பெருமாள் வாசம் செய்கிறார் என்பது பலருக்கு தெரியாது, அதிலும் இந்த கலியுகம் முடியும் காலம் வரை இந்த இடத்தில் வாசம் செய்வேன் என்று பெருமாளே கூறியுள்ளார்.

இத்தலத்தை பற்றி மேலும் அறிந்து கொள்வோம்....

திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து, நாமக்கல், சேலம், முசிறி ஆகிய பேருந்துகளில் ஏறி குணசீலம் பெருமாள் கோவில் என்று கேட்டால், கோவில் அருகிலேயே இறக்கிவிடுவார்கள்.

குணசீலம் சென்று தரிசித்தால் திருப்பதியை தரிசித்த பலன் கிட்டும்

இத்தலத்தில் நடக்கும் சஹஸ்ரநாம அர்ச்சனை வழிபாடு மிக விசேஷம். அரைமணி நேரத்துக்கு நடைபெறும் இந்த வழிபாட்டில், நூற்றுக் கணக்கில்

e-magazine
aanmeegamalar.com






பக்தர்கள் கலந்து கொள்கிறார்கள்.

கலியுகம் முடியும் வரை இத்தலத்தில், தான் சாந்நித்யத்துடன் வசிப்பதாக பெருமாளே கூறியுள்ள அற்புதத் தலம்.

பெருமாள், "பிரசன்ன வெங்கடாஜலபதியாக'' அருள்கிறார். இத்தலம் தென்திருப்பதி என போற்றப்படுகிறது. மார்கழி மாத கூடாரவல்லி, வைகுண்ட ஏகாதசி, புரட்டாசி சனிக்கிழமைகள், மார்கழி மாத பிரம்மோற்சவம் போன்றவை இத்தல விசேஷங்கள். இத்தலம், சிறந்த பிரார்த் தனை தலமாகவும், பரிகாரத் தலமாகவும் போற்றப் படுகிறது. கருவறையில் கிழக்கு நோக்கி நின்று, மார்பில் மகாலட்சுமி, கையில் செங்கோல் ஏந்தியபடி பெருமாள் காட்சி தருகிறார்.

வைகானஸ ஆகமத்தை தோற்றுவித்த விகனஸருக்கு, இந்த ஆலயத்தில் தனி சந்நதி நிர்மாணிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டுள்ளது. தால்பிய மகரிஷியும் அவர் சீடர் குணசீல மகரிஷியும் திருப்பதி பெருமாளின் பேரழகில் மயங்கி அவரைப் போன்ற மூர்த்தத்தை தமிழ்நாட்டில் பிரதிஷ்டை செய்ய விரும்பினார்கள்.

அதன்படியே செய்ததோடு அந்தத் தலத்துக்கு சீடரின் பெயரையும் வைத்து அவருக்குப் பெருமை சேர்த்தார் குரு. பவிஷ்யோத்திரபுராணத்தில், இத்தலம் பற்றி "குணசீலமகாத்மியம்'' எனும் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்தே, இத்தலத்தின் தொன்மை விளங்கும்.

உறையூரைத் தலைநகராகக்







கொண்ட சோழ மன்னன், நியாயவர்மன்என்பவர் இத்தலத்தை புதுப்பித்திருக்கிறார். தீய சக்திகளால் ஆட்பட்டவர்களையும் இந்த பெருமாள் குணப்படுத்துகிறார் என்பதால், அமானுஷ்ய பாதிப்புக்குள்ளானவர்களும் பெருமாளை தரிசித்து துன்பம் நீங்கப் பெறுகிறார்கள். தன் கையில் உள்ள செங்கோலால் பக்தர்களின் உடல் நலம், மன நலம் காப்பதில் இந்த பெருமாள் நிகரற்றவராகத் திகழ்கிறார்.

மற்ற திருமால் ஆலயங்களில், வாரம் ஒரு முறையே திருமஞ்சனம் நடக்கும். ஆனால் இத்தலத்தில் பெருமாளுக்கு தினமும் திருமஞ்சன சேவை நடக்கிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், 48 நாட்கள் காவிரியில் நீராடி, கோயிலில் உச்சிக்கால பூஜையையும், அர்த்தஜாம பூஜையையும் தரிசிக்க, அவர்கள் மனநலம் குணமடையப் பெறுகிறார்கள்.

திருப்பதி சென்று பெருமாளை தரிசிக்க இயலாதவர்கள், குணசீலம் சென்று தரிசித்தால் திருப்பதியை தரிசித்த பலன் கிட்டும் என பெருமாளே குணசீல மகரிஷியிடம் வரம் தந்துள்ளதாக புராண வரலாறு சொல்கிறது. இத்தல பெருமாளுக்கு செய்யப்படும் சந்தனக் காப்பு அலங்காரம், மிக அற்புதமானது. நாம் குருவாயூரில்தான் இருக்கிறோமோ! என்று திகைக்க வைத்த வண்ணம் அந்த அலங்காரம் அழகுற அமைந்திருக்கும்.

`குணம்' என்றால் குண மடைதல். `சீலம்' என்றால் இடம் என்று பொருள். பக்தர்களின் உடல் நோய்களையும், மனநோய்களையும் குணப்படுத்துவதால் இத்தலம் குணசீலம் என்றாயிற்று.


பொதுவாக பெருமாளை காசு, பணம், துட்டு, தங்கம், வைரம் தந்தருளும் பணக்கார தெய்வமாக மட்டுமே பார்த்திருப்போம், ஆனால் குணசீலப் பெருமாள் இவற்றோடு மன நோய்களையும் தீர்த்து வைக்கும் வல்லமை படைத்தவராகவிளங்குகிறார்.

திருமலைக்கு செல்ல முடியாதவர்கள் அவசியம் குணசீலம் பெருமாளை தரிசித்தாலே போதும் திருப்பதி வெங்கடாஜபதியை பார்த்த புண்ணியம் கிடைக்கும்.

தற்போது விடுமுறை காலம் என்பதால் திருப்பதியில் தரிசனம் முன்பதிவு முழுமையடைந்துவிட்டது திருப்பதி செல்லமுடியவில்லை என்று வருத்தப்படுபவர்கள் குணசீலம் பெருமாளை தரிசனம் செய்யலாம். திருப்பதி சென்ற பலன் கிடைக்கும்.








# குழந்தையாக பிரம்மா அவதாரம் எடுத்து சிவனின் திருமுடியை கண்ட சிவஸ்தலம் வரதட்சணை முறையை அழித்த திருக்கோவில்

கோவில்களில் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் சிவ தீட்சை பெற்றபின் சிவ பூஜை செய்யும் உரிமைப் பட்டயம் அரசனால் வழங்கப்படும் நடை முறை அக்காலங்கலங்களில் பின்பற்றப்பட்டுவந்தது. அதை வைத்து கோவில்களில் பூஜை களை அவரது பரம்பரையினர் செய்து வரலாம், அடுத் தடுத்தவர் சிவதீட்சை பெற்றபின்பே அக் கோவில் களில் தொடர்ந்து சிவபூஜை செய்ய முடியும்.

இவ்வாறு சிவனுக்கு தொடர்ந்து பூஜை செய்து வந்தவந்தவர் நயனா இவரின் மனைவி



e-magazine
aanmeegamalar.com

நந்தினி இத் தம்பதிக்கு "சிவசர்மன்' என்ற மகன் பிறந்தார். தன்னுடைய ஐந்தாம் வயதில் தந்தையை இழந்தார். சிவதீட்சை பெறாத சிவ சர்மனின் பூஜை உரிமையை உறவினர்கள் பறித்துகொண்டனர்.

சிவசர்மனின் தாயார் சிவனிடம் வேண்ட, அவர் கனவில் தோன்றி மறுநாள் கோயிலின் வெளியே உள்ள பிரம்மத் தீர்த்தத்தில் மகனை நீராட்டிக் காத்திருக்கும்படியும் தாம் வழிகாட்டுவதாகவும் கூறினார்.

மறுநாள் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை ஒரு முதியவர் உருவில் வந்த சிவனோ, சிவசர்மனுக்குப் பூணூல் அணிவித்து சிவதீட்சை செய்து பூஜை செய்யும் முறையை சொல்லித் தந்து மறைந்தார்.

ஐந்து வயது சிவசருமன் பூஜைசெய்யும் போது லிங்கத்தின் உயரத்தைவிட குறைவாக இருந்த காரணத்தால் பூஜை செய்ய முடியாத நிலையில், லிங்கத் திருமேணியான வழித்துணைநாதர் சிவசருமனின் பூஜையை ஏற்க தன் தலையை சாய்ந்து முடியைக் காட்டி பக்தனின் பூஜையை ஏற்றார்.

இந்த அளவிற்கு அற்புதம் நிறைந்த கோவில் தான் விரிஞ்சிபுரம் அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் ஆலயம்.

இத்திருக்கோவில் வேலூர் மாநகரத் திலிருந்து 12கி.மீ. தொலைவில் விரிஞ் சிபுரம் உள்ளது. வேலூர், ஆம்பூர், குடியாத்தம் பகுதிகளில்இருந்து பயணித்து, செதுவாலையில் இருந்து உள்புறமாகச் சென்றால் இத்திருக்கோவிலை அடையலாம்.

இத்திருக்கோவிலில் சிவசருமனாக பிறவி எடுத்தது பிரம்மன் என்ற புராண இதிகாச கதையும் உண்டு, திருவண்ணாமலையில் சிவனின் திருமுடியை காண முடியாத சோகத்தில் இருந்த பிரம்ம தேவன் தனது சிவ பக்தியை பயன் படுத்தி, சிவசருமனாக அவதரித்து, சிவபக்தி மூலம் சிவனின் திருமுடியை இத்தலத்தில் கண்ட தாகவும் கூறப்படுகிறது.

மேலும் இத்தலத்திற்கு பல்வேறு புராண கதை களும் கூறப்படுகிறது.

இத்தலத்தின் அருகில் கர்நாடகம், ஆந்திரத் துக்கு வியாபாரத்துக்காகப் பொதி மூட்டைகள் ஏற்றிச் செல்வோர் தங்களின் சரக்குகள் கள்வர்களால் சூறையாடப்படாமல் நன்கு வியாபாரமானால் இறைவனுக்கு காணிக்கை செலுத்துவதாக வேண்டிச் செல்லுவர். அதன்படி வழியெல்லாம் துணைக்கு வருபவராதலால் "வழித்துணை நாதர்' என வணங்கப்படுகிறார்.

வடமொழியில் மார்க்கபந்தீஸ்வர் என வணங்குவர். கருவறையில் சுயம்புலிங்கமாக வடகிழக்கு திசையில் சிறிது சாய்ந்த நிலையில் காட்சி அருளுகிறார். மூலவரின் மீது பங்குனி மாதத்தில் சூரியக் கதிர்கள் விழுந்து சுவாமியைத் தொட்டு வழிபடும் சூரிய பூஜை நடைபெறுகிறது.

இறைவி மரகதாம்பிகை, விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை, தட்சிணாமூர்த்தி, பைரவர், விஷ்ணு துர்கை, சரஸ்வதி, பிரம்மா, 63 நாயன்மார்கள் ஆகியோரும் அருளுகின்றனர்.

42 அடி உயர வானளாவிய திருமதிற்சுவர்கள், ஐந்து பிரகாரங்கள், இரட்டை அடுக்கு திருமாளிகை, பத்தி மண்டபங்கள், சிறந்த கலைநுட்பத்துடன் கூடிய சிற்ப



e-magazine
aanmeegamalar.com



வேலைப்பாடுகள் மிகுந்த வட, தென்பிரகார திருக்கல்யாண மண்டபங்கள், நூற்றுக்கால் மண்டபம், சிம்ம தீர்த்தம், பிரம்ம தீர்த்தங்களைக் கொண்டுள்ளன.

சிம்மக்குளத்தில் கார்த்திகை கடைசி ஞாறன்று பெண்கள் நீராடிய பின், ஈர ஆடையுடன் இறைவனை வணங்கி, மகா மண்டபத்தில் உறங்குவர்.

கனவில் பூக்கள், பழங்கள், புத்தாடைகள் போன்ற மங்கலப் பொருள்கள் தெரிந்தால், அந்தப் பெண்கள் விரைவில் கருத்தரிக்கும் பாக்கியத்தினை அடைவர் என்பது நம்பிக்கை.

புத்திர பாக்கியம் பெற்று, நேர்த்தி கடன் செலுத்துவதற்காக, மூலவரின் பெயரையே குழந்தைக்கு சூட்டி, தம்பதிகள் கோயில் தல விருட்சமான பனை, பலா மரங்களில் தொட்டில் கட்டி, வசதிக்கேற்ப எடைக்கு எடை வேண்டிய காணிக்கை செலுத்துவதும், திருமணங்களை திருத்தலத்திலேயே நடத்துவதும் வழக்கமாக உள்ளது.

கோயிலில் உள்ள அதிசய பனைமரத்தில் பனங் காய்கள் ஓராண்டு கருப்பாகவும், அடுத்தாண்டு வெள்ளையாகவும் காய்க்கின்றன.

வரதட்சணைமுறையை அழித்ததற்கான ஆதாரம் இத்தலத்தில் உள்ள கல்வெட்டில் உள் ளது.

கி.பி.1426–ஆம் ஆண்டு விஜயநகர அரசு கல்வெட்டின்படி “பிராமணர்களில் கன்னடியர், தெலுங்கர், தமிழர் முதலானோர் திருமணம் செய்யுமிடத்து பெறப்படும் வரதட்சனையை தடை செய்து, கன்னிகாதானம் செய்ய வேண்டும். பொன் வாங்கி பெண் கொடுப்பது, பொன் கொடுத்து திருமணம் செய்வது அரசத் துரோகமாகும். மீறுவோர் சாதியிலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் விலக்கி வைக்கப்படுவர்’ என்று உள்ளது.

கோயிலின் உள்ளே தென்புறத்தில் உள்ள நேரம் காட்டும் கல்லில், மேற்புறம் உள்ள பள்ளத்தின் வழி ஒரு குச்சியை நீட்டினால், எந்த நேரமோ அதற்கு நேராக குச்சியின் நிழல் விழுந்து நேரம் காட்டும். மேலும் இத்தலத்தைப் பற்றி அறிந்து கொள்ள தொடர்பு எண்: 8072016296





# நினைத்ததை நிறைவேற்றும் மாசி அமாவாசை சிவ வழிபாடு

e-magazine
aanmeegamalar.com



நினைத்த காரியம் நிறைவேற்றி வைக்கும் சக்தி அமாவாசை வழிபாட்டுக்கு உண்டு. ஒவ்வொரு மாதமும் அமாவாசை திதி வருகிறது என்றாலும், சிவனுக்கு உகந்த மாசி அமாவாசை தினத்திற்கு சிறப்பு உண்டு. இந்த நாளில் சிவ வழிபாடு சிறப்பான பலன்களை தரவல்லது. இந்த நாளில் மேற்கொள்ளப்படும் அனைத்து பிரார்த்தனைகள், வேண்டுதல்களும் நிறை வேறும்.

இன்றைய சமையலில் புடலங்காயை சேர்த்துக் கொள்வது மிகவும் விசேஷம். அதே போல் இந்நாளில் பித்ருக்களை நினைத்து எள்ளும், தண்ணீரும் இறைத்து வீட்டிலேயே எளிய வழிபாடுகளை மேற் கொள்ளலாம்.

பித்ரு வழிபாட்டிற்கு ஆசைகளை நிறைவேற்றித் தரக் கூடிய அற்புதமான சக்தி உண்டு. வம்சம் தழைக்க வேண்டும் என முதலில் வந்து நமக்கு உதவி செய் வது பித்ருக்கள் தான். லிங்கத்தை வைத் திருப்பவர்கள் அதற்கு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், விபூதி, குங்குமம், பஞ் சாமிர்தம் இவைகளால் அபிஷேகம் செய்து வழிபடலாம்.

வில்வ இலைகளால் அர்ச்சித்து சிவ ஸ்தோத்திரங்களை உச்சரித்து, சிவ வழிபாடு மேற்கொண்டால் முன்வினை பாவங்கள் நீங்குவதாக ஐதீகம். அதே போல் விநாயகருக்கு உகந்த அரச மர இலைகளை பறித்து வந்து விநாயகருக்கு முன்பாக ஒற்றை படையில் அரச இலை களை அடுக்கி வைத்து, அதன் மீது ஒற்றை அகல் விளக்கில் நல்லெண்ணெய் அல்லது நெய் ஊற்றி தீபமேற்றி வழிபாடு செய்யலாம்.

இப்படி செய்வதால் நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். இத்துடன் பசுவிற்கு வாழைப் பழம், அகத்திக்கீரை, பச்சரிசிவெல்லம் இவைகளையும்தானமாக கொடுக்கலாம்.

இதனால் தொடர் தோல்விகள் வெற்றியாக மாறும் வாய்ப்புக்கள் அதிகம். இந்த அற்புத சக்தி வாய்ந்த அமாவாசையில் பித்ரு வழிபாட்டையும் இதனையடுத்து இறை வழிபாட்டையும் மேற்கொள்ள நினைத்த காரியம் நிறைவேறும். சிவன் தாள் பணிவோம். சிவன் அருள் பெறு வோம்.

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
172 க்கும் மேற்பட்ட
இதழ்களை




aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# காசி விநாயகர்களின் பெயரும் சிறப்பும்



லம்போதர விநாயகர்



கர்வ விநாயகர்

## பீம்சண்டி விநாயகர்

பீமசண்டி விநாயகரை வழிபடுவது பக்தர்களின் மனதில் உள்ள அனைத்து பயங்களும் நீக்கும்.

## தெஹ்லி விநாயகர்

காசி கண்டத்தின் படி தெஹ்லி விநாயகர் காசியின் எல்லை அல்லது நுழைவுப் வாயிலில் இருக்கிறார். இந்தியில் தெஹ்லி என்றால் வாசல் என்று பொருள். தெஹ்லி விநாயகரை வழிபட்டால் பக்தர்களின் வழியில் வரும் தடைகள் அனைத்தும் நீங்கும்.

## உத்தண்ட விநாயகர்

இந்த விநாயகர் ஒரு பக்தரின் அன்றாட வாழ்க்கையில் வரும் பெரிய தடைகளை நீக்கும் திறன் கொண்டவர்

## பாஸ் பாணி விநாயகர்

இந்த விநாயகரை வழி பட்டால் பக்தர்களின் தடைகள் நீங்கி வாழ்வு சீராகும்

## கர்வ விநாயகர்

கர்வ விநாயகரை மனதார வணங்கும் அனைத்து பக்தர் களையும் அவர் ஆசீர் வதிக்கிறார்.

ஆன்மிகமலர்.காம்






பாஸ் பாணி விநாயகர்



கர்வ விநாயகர்

## சித்தி விநாயகர்

காசியில் பக்தர்களைக் காக்கும் நோக்கத்துடன் அமர்ந்துள்ளார், சித்தி விநாயகர் தனது பக்தர்களுக்கு சித்தியை வழங்குகிறார்.

## லம்போதர விநாயகர்

லம்போதர விநாயகர் தனது பக்தர்கள் அனைவருக்கும் சக்தி யை அளித்து, (ஆற்றலை) எல்லா நீக்கு தடைகளையும் நீக்குகிறார்.

## கூட் தந்த விநாயகர்

இந்த விநாயகர் கடுமையான தடைகளையும் நீக்கி காசி பகுதியைக் காக்கிறார்

## ஷால் கண்ட விநாயகர்

ஷால் கண்ட விநாயகரை வழிபட்டால் எல்லாவிதமான மகிழ்ச்சியும் கிடைக்கும்.

## கூஷ்மாண்ட விநாயகர்

கூஷ்மாண்ட விநாயகரை வழிபடுவது பக்தர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

## முண்ட விநாயகர்

முண்ட விநாயகர் மிகவும் விசித்திரமாக காணப்படுகிறழர். முண்ட என்றால், தலை பகுதி. இந்த விநாயகரின் தலை பகுதி (முண்டம்) மட்டுமே தெரியும். முண்ட விநாயகர் சர்வ சக்தி வாய்ந்தவராக கருதப் படுகிறார்.

இவரை வணங்கினால், பக்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும் என்று கூறப் படுகிறது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



e-magazine
aanmeegamalar.com



aanmeegamalar.co

## அனுமனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட

# கீர் பவானி கோவில்

காஷ்மீரின் தலைநகரமான ஸ்ரீநகரிலிருந்து சுமார் 28 கி,மீ தொலைவில் உள்ளது "ஸ்ரீகீர் பவானி திருக்கோவில்".

இயற்கையான ஊற்றுகளுக்கு நடுவே, தங்க தகடு வேய்ந்த விமானத்துடன், மார்பிள் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது பவானி தாயின் திருசன்னதி.

மிகவும் புனிதமான இக்கோவிலை அமர்நாத் செல்லும் பக்தர்கள் தவறாமல் தரிசிப்பது வழக்கம். துர்கையின் அம்சமான "ரங்கா தேவி" இராவணனால் பூஜிக்கப்பட்டு, பின் அனுமனால் இங்கு கொண்டு வரபட்டதாக செய்தி.

இராமர் வனவாசத்தின் போது, பவானி தேவியை வழிப்பட்டு, பின் அனுமனால் இங்கு பிரதிஷ்டை செய்ததாக சொல்வதும் உண்டு. தரிசிக்க வரும் பக்தர்கள், பாலினால் செய்த அன்னத்தை திருக்குளத்தில் சமர்ப்பணம் செய்வதால் "கீர் பவானி" கோவில் என அறியப்படுகிறது.

கோவிலை சுற்றியுள்ள குளத்து நீரின் நிறம் அவ்வப்போது மாறுகிறது என்பது அதிசயம். இங்கு வரும் பக்தர்கள் மிகுந்த பக்தியுடன், உடல், மன சுத்தியுடன், விரதம் இருந்து நியதியாக வருகிறார்கள். "கீர் பவானி" தேவியை தரிசிக்கும் போது அளவில்லாத ஆனந்தமும், ஆத்ம திருப்தியும் கிடைப்பது உண்மை!!!

சுபத்திரா ரங்கநாதன்
R.Subadhra Ranganathan
Dilshukh Nagar, Hyderabad-500 036.
Telengana

ஆன்மிகமலர்

# வீடுகளில் பூஜை செய்யும் போது அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள்!



நாம் வீட்டில் பூஜைகள் செய்யும் பொழுது பூஜா விதானம் அல்லது எந்த பூஜை செய்கி றோமோ அதற்குண்டான புத்தகத்தை வைத்துக் கொண்டு பூஜை சிறப்பாக செய்து விடுவோம்.

அன்றைய கிழமை, திதி, நட்சத்திரம் ஆகிய வற்றை தினசரி காலண்டரை வைத்துக் கொண்டு சொல்லி விடுவோம்.

ஆனால், ருது என்ன வென்று சரியாகத் தெரிந்து இருக்காது. பூஜை முடிந்ததும் பழங்கள், பக்ஷணங்கள் எல்லாம் இருக்கும். அவற்றின் நிவேதனப் பெயர்கள் தெரிந்து இருக்காது.

இந்த நிவேதனப் பெயர்களை தெரிந்து கொண்டு பூஜை செய்தால் இன்னும் சுலபமாக இருக்கும்.

1. கதலீபலம் – வாழைப்பழம்
2. பீஜாபூரபலம் – கொய்யாப்பழம்
3. வேத்ர பலம் – பெரப்பம் பழம்
4. பதரி பலம் – எலந்தைப் பழம்
5. கர்ஜூர பலம் – பேரிச்சம் பழம்
6. ஜம்பூ பலம் – நாவல் பழம்
7. கபித்த பலம் – விளாம் பழம்
8. த்ராஷா பலம் – திராறக்ஷ பழம்
9. சூ பழம் – மாம்பழம்
10. மாதுஸங்கபழம் – மாதுளம் பழம்
11. நாரங்கபலம் – நார்த்தம்பழம் அல்லது சாத்துக்குடி
12. பனஸ பலம் – பலாப் பழம்
13. உர்வாருகம் – வெள்ளரிக்காய்
14. ஜம்பீர பலம் – எலுமிச்சம் பழம்
15. இக்ஷஸகண்டம் – கரும்பு
16. சணகம் – கடலை
17. ப்ருதுகம் – அவல்
18. ஸர்க்கரா – சர்க்கரை
19. ததி – தயிர்
20. குடோபஹாரம் – வெல்லம்
21. காஷ்மீர பலம் – ஆப்பிள்
22. அமிருதம் – தீர்த்தம்



| | | |
|---|---|---|
| 23. நாரிகேளம் | – | தேங்காய் |
| 24. ஸால்யன்னம் | – | சம்பா அன்னம் |
| 25. குளா பூபம் | – | அதிரசம், அப்பம் |
| 26. தத்யன்னம் | – | தயிர் சாதம் |
| 27. திந்திரியன்னம் | – | புளியோதரை |
| 28. ஸர்கரான்னம் | – | சர்க்கரை பொங்கல் |
| 29. மாஷா பூபம் | – | வடை |
| 30. ரஸகண்டம் | – | கற்கண்டு |
| 31. மோதகம் | – | கொழுக்கட்டை |
| 32. திலான்னம் | – | எள்ளு சாதம் |
| 33. ஆஜ்யோபகாரம் | – | நெய் |
| 34. லட்டுகம் | – | லட்டு |
| 35. சித்ரான்னம் | – | பலவகை கலந்த சாதம் |
| 36. நாரிகேள கண்டத்வயம் | – | இரண்டாக உடைத்த தேங்காய் |
| 37. க்ருதகுள பாயஸம் | – | வெல்லம் போட்ட பாயஸம் |
| 38. கோக்ஷீரம் | – | பசும் பால் |

## ருதுக்கள்

| | | |
|---|---|---|
| சித்திரை, வைகாசி | – | வஸந்த ருது |
| ஆனி, ஆடி | – | க்ரீஷ்ம ருது |
| ஆவணி, புரட்டாசி | – | வர்ஷ ருது |
| ஐப்பசி, கார்த்திகை | – | சரத் ருது |
| மார்கழி, தை | – | ஹேமந்த ருது |
| மாசி, பங்குனி | – | சிசிர ருது |

## கிழமைகளைச் சொல்லும் முறை

| | | |
|---|---|---|
| ஞாயிறு | – | பானு வாஸர |
| திங்கள் | – | இந்து வாஸர |
| செவ்வாய் | – | பவும வாஸர |
| புதன் | – | சவும்ய வாஸர |
| வியாழன் | – | குரு வாஸர |
| வெள்ளி | – | ப்ருகு வாஸர |
| சனி | – | ஸ்திர வாஸர |

## பூஜைகள் செய்யும் பொழுது, மாதங்களைக்குறிக்கும் முறை

| | | |
|---|---|---|
| சித்திரை | – | மேஷ மாஸே |
| வைகாசி | – | ரிஷப மாஸே |
| ஆனி | – | மிதுன மாஸே |
| ஆடி | – | கடக மாஸே |
| ஆவணி | – | ஸிம்ம மாஸே |
| புரட்டாசி | – | கன்யா மாஸே |
| ஐப்பசி | – | துலா மாஸே |
| கார்த்திகை | – | வ்ருச்சிக மாஸே |
| மார்கழி | – | தனுர் மாஸே |
| தை | – | மகர மாஸே |
| மாசி | – | கும்ப மாஸே |
| பங்குனி | – | மீன மாஸே. |

– ராணி கிருஷ்ணமூர்த்தி,
குரோம்பேட்டை..

# செயல் மட்டுமே இறைவனைக் காட்டும்!

ஒரு மனிதன் நன்றாக இயங்க வேண்டுமென்றால் அவனது இதயம் திறம்பட வேலை செய்ய வேண்டும் ஒரு ஓவியம் பார்ப்பதற்கு அழகாவும் பார்ப்பவரை ஈர்ப்பதாகவும் இருக்க வேண்டுமானால் அதை வரைந்தவனுக்கு அபரீதமான கற்பனை வளம் இருக்க வேண்டும். ஒரு கட்டிடம் விண்ணை நோக்கி கம்பீரமாக எழுந்து நிற்க வேண்டுமானால் அதற்கு ஆழமான வலுவான அஸ்திவாரம் அமைந்திருக்க வேண்டும் அதே போலவே ஒரு மதமானது காலகாலத் திற்கு நிலைத்து நின்று பலதரப்பட்ட மக்களை தம்பால் அரவணைத்து வளர்ந்து செழிக்க வேண்டுமானால் அதற்கு வளமையான ஆழமான அறிவு பூர்வமான அனுபவத்திற்கு ஒத்துவரக்கூடிய தத்துவம் தேவை தத்துவம் இல்லாத மதம் மூளை இல்லாத மனிதனை போல விபரீதமான செயல்களை செய்து தானும் அழிந்து மற்றவர்களையும் அடிச்சுவடு இல்லாதவாறு அழித்துவிடும்.

நமது இந்தியாவில் தோன்றிய குறிப்பாக இந்து மதத்தின் ஆதார விழுதுகளில் இருந்து தோன்றிய எந்த மதத்திற்கும் தத்துவங்களில்



குறைபாடுகள் என்பதே கிடையாது என்று துணிந்து சொல்லலாம். இன்றைய நாகரீக உலகம் வியந்து பார்க்க கூடிய அளவிற்கு அறிவார்த்தமான தத்துவங்களை தனக்குள் கொண்டுள்ளது இந்திய மதங்கள். குறிப்பாக சொல்வது என்றால் இந்து மதத்தின் மிக உறுதியான கிளைகளில் ஒன்றான சீக்கிய மதத்தின் தத்துவங்கள் மனதை கவரக்கூடியது மட்டுமல்ல மனிதனை மனிதனாக மாற்ற கூடியதாகவும் இருக்கிறது. காரணம் சீக்கிய சமயம் கண்ணுக்கு தெரியாத புலங்களுக்கு அகப்படாத மாயமாக இருக்கிறதா? இல்லையா? என்ற வாதபிரதிவாதங்களுக்கு உட்படுத்த பட்ட எந்த விஷயத்தை பற்றியும் பேசவில்லை அல்லது அவைகளை பற்றி கவலை அடையவில்லை சீக்கியம் கண்ணுக்கு நேரே தெரிகின்ற விஷயங் களை பற்றி மட்டுமே பேசுகிறது அதற்கான விளக்கங்களையும் தருகிறது.

சுவாமி விவேகானந்தர் ஒருவன் கீதை படிக்கும் நேரத்தில் கால்பந்தாட்டம் ஆடினால் நன்றாக இருக்கும் என்று சொல்வார். இதன் அர்த்தம் கீதை படிப்பது வீணான வேலை என்பது அல்ல. கருத்துக்களும் தத்துவங்களும் பலகீனமான மனதில் படியும் என்றால் அவைகள் அனர்தமனமான வடிவங்களையே அடையும். உறுதியான பலம் பொருந்திய சரிரத்தில் இருக்க கூடிய கருத்துக்கள் கட்டுப்பாடு மிக்கதாகவும் கட்டி அனைத்து செல்வதாகவும் இருக்கும்.

அதனால் தான் விவேகானந்தர் முதலில் வலுவான உடம்பை பெரு அதன் பிறகு அறிவையும் மனதையும் விசாலபடுத்து என்கி றார். சுவாமி விவேகனந்தர் இந்த கருத்தை வேதங்களிலும் உபநிசதங்களிலும் இருந்து பெற்றுப்பார் என்பதில் மாற்று கருத்து கூறிவிட முடியாது. ஆனாலும் இந்த கருத்தில் மிக உறுதி தன்மை அவருக்கு சீக்கிய மதத்தை பற்றிய நல்ல எண்ணம் உதித்த பிறகே தோன்றி இருக்கலாம் என்று நமக்கு தோன்றினால் அதில் தவறு இல்லை.

இந்த உலகம் நிலை இல்லாதது அழிய கூடியது இதில் காணுகின்ற பொருள்கள் அனைத்துமே மனித வாழ்வை கீழ்நிலை படுத்திவிட கூடியவைகள் மனித வாழ்க்கை கூட அநித்தியமானது உண்மையை சொல்வது என்றால் கானல் நீரை நோக்கி பயணப்படும் மாயை என்பதே ஆகும் என்ற கருத்து நமது இந்தியாவில் மட்டுமல்ல உலக முழுவதுமே பல கோணங்களில் பரவி இருக்கிறது. இந்த கருத்தை சீக்கிய மதம் முற்றாக முழுமையாக மறுக்கிறது. அப்படி மறுக்கும் சீக்கிய சமய கோட்பாட்டின் பெயர் மீரி பீரி கொள்கை என்பது. மீரி என்றால் கண்ணுக்கு தெரிகின்ற உலகம் என்பது பொருளாகும். பீரி என்றால் உலகை கடந்த ஆன்மிகம் என்பது பொருளாகும்.

இந்த மீரி பீரி என்ற வார்த்தைகளின் ஆழமான பொருள் என்னவென்றால் இந்த உலகமும் இதை கடந்து செல்கின்ற ஆன்மீக உணர்வும் வேறு வேறானது அல்ல ஒன்ற ஒன்று தாக்கி அழிக்க கூடியதும் அல்ல இரண்டும் ஒன்றாக இருந்தால் மட்டுமே இறை உணர்வு என்ற ஆன்மீக பேரானந்தம் கிடைக்கும் என்று சொல்வதற்காகவே உருவாக்க பட்டதாகும். சீக்கிய மதத்தை கட்டி எழுப்பிய குருநானக்கின் காலத்திலேயே மீரி, பீரி கோட்பாடு ஆரம்பமாகி விட்டது என்று சொல்லலாம்.

குருநானக்கின் காலத்தில் பஞ்சாப் பிரேதேசம் முழுவதும் அங்கிங்கெனாதபடி எங்கும் கோரக்நாதர் மரபில் வந்த சித்தர்கள் பரவி கிடந்தார்கள். இந்த மகாபுருஷர்கள் மக்களுக்கு இறையனுபுதி பெறுவதற்க்கான எளிய பல வழிகளை காட்டி கொண்டிருந்தார்கள். இதே நேரத்தில் பஞ்சாப் பகுதி அடிக்கடி மாற்று மதத்தினரின் கொடூரமான தாக்குதலுக்கு ஆளாகி நாடு முழுவதுமே இரத்த ஆறு ஒடிகொண்டிருந்தது.

வெட்டி வீழ்த்தவரும் எதிரியின் கொடுவா ளுக்கு மக்கள் அஞ்சவில்லை என்றாலும் கோரக் நாதர் சித்தர்களின் சித்தாந்தப்படி எதிரிகளை தாக்காமல் அமைதி பாராட்டுபவர்களாக இருந் தார்கள். மக்களின் இந்த போக்கை குருநானக் விரும்பவில்லை தாக்க வருகின்ற கரங்களுக்கு தங்க பூண் போடுவது கோழைகளின் வேலை கொல்லவரும் கைகளை வெட்டி வீழ்த்துவதே உயர்தரமான ஆண்மை அதுவே இறைவனுக்கு உகந்த செயலாகும் என்று அவர் கருதினார்.

அடித்தட்டு மக்கள் ஆட்சியாளர்களின் கொடுங்கோன்மையினால் அவதிப்படும் போது படையெடுப்புகளால் அல்லலுறும் போது ஜாதி இன ஒதுக்களால் கீழ்மை படும் போது அவர்கள் மத்தியில் சென்று ஆன்ம விடுதலைக்காக பேசுவதும் முயற்சிப்பதும் தவறு என்பது குருநானக்கின் மிக முக்கிய கோட்பாடாகும். துறவிகளின் தன்னலமற்ற ஞானம் ஆன்ம விடுதலையை மட்டும் குறிகோளாக கொண்டு செயல்பட கூடாது சமூக விடுதலைக்காகவும் செயல்பட வேண்டும் என விரும்பினார். தன்

e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



ஒருவனின் மோட்சத்திற்காக தவம் செய்யும் ஞானிகளை அவர் கண்டித்தார். இந்தியாவில் இதுவரை இருந்துவரும் ஆன்மீக ஞானம் மக்களை உலக வாழ்வில் இருந்து தனியாக பிரித்து மரணத்திற்கு பிறகு வரும் ஆன்மீக வாழ்வையே நோக்கமாக கொள்ள செய்து விட்டது என கருதி அதை தவிர்பதற்காக பாடுபட்டார்.

உலகத்தின் உண்மை தன்மையை ஆன்மிகம் ஏற்றுகொள்ள வேண்டும் உலகை செயல்பட கூடியதாக ஆன்மிகம் மாற்ற வேண்டும் உலக செயல்பாடுகளுக்கு ஆணி வேறாக ஆன்மீகத்தின் உயர்ந்த மதிப்பீடுகள் இருக்க வேண்டும் ஆன்மிகம் உலகத்தாலும் உலகம் ஆன்மீகத்தாலும் செழுமை அடைய வேண்டும் என்று சீக்கிய சமயம் கருதுகிறது. உலகத்தை வெறுத்து துறவை மேற்கொள்வதனால் சமூக வாழ்வில் பல சீர்கேடுகள் தலை தூக்கிவிட்டன எனவே உலகத்தை வெறுக்கும் மனோபாவம் மாறி உலகத்தை திருத்தவே முடியாது என்ற எண்ணம் மறைந்து உண்மையான அன்பு வளர வேண்டும் என்பதே சீக்கியத்தின் ஆழமான தத்துவமாகும்.

மீரி, பீரி கோட்பாடு சீக்கிய மதத்தின் வரலாற்று பக்கங்களை பல்வேறு விதமாக வளர்த்தது குருநானக்கின் பாடல் வரிகளில் பல இடங்களில் சமூக அக்கறை அடித்தளமக்களின் சார்பு தன்மை சமூக அடக்கு முறைகளுக்கு எதிரான ஆவேசம் ஜாதி எதிர்ப்பு போன்றவைகளை காணலாம். சீக்கிய மதத்தில் லங்கர் என்ற விருந்து நிகழ்ச்சி மிகவும் முக்கியமானது இதில் ஏழை பணக்காரன் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற பாகுபாடு பார்க்க படாமல் அனைவருக்கும் சமமான போஜனம் நடைபெறும் கபீர் தாசர் பசித்த வயிற்றுக்கு உணவு தராமல் பிராத்தனை செய்ய என்னை அழைக்காதே என்று பாடியதை அடிப்படையாக கொண்டே இந்த லங்கர் விருந்து அமைகிறது.

பல சீக்கிய குருமார்கள் இறைவனை தனிவொரு பொருளாக பார்க்காமல் செயல்பாடுகளின் கூட்டு வடிவமாகவே கண்டார்கள் அதாவது செயல் ஒன்றே இறைவனின் வடிவம் என்பது இவர்களின் ஆதார கருத்துக்களாகும். உருகிய இரும்பே இறைவன் இருபுறமும் கூர்கொண்ட வாளே இறைவன் என்ற குரு கோவிந்தரின் பாடல் வரிகள் இந்த கருத்தை மெய்ப்பிப்பதாக இருக்கிறது.

அடக்குமுறை அராஜகம் போன்றவற்றை அணிகலன்களாக கொண்ட அன்றைய இஸ்லாமிய மன்னர்களை எதிர்த்து போராட சாதாரண மக்களை ஆயுததாரிகளாக மாற்றுவதற்கு

e-magazine
aanmeegamalar.com



குருகோவிந்தரின் இந்த சித்தாந்தம் பயன்பட்டது என்று அழுத்தமாக சொல்லலாம்.

ஆன்மிகம் சமூகம் மட்டுமல்ல சீக்கியத்தின் பார்வை தனிமனிதனையும் ஒருவித கரிசனத் தோடே பார்க்கிறது. ஒரு மனிதன் எதுவோடும் சம்மந்தமில்லாத தனித்த ஜீவன் அல்ல அவன் இறைவனோடும் உலகத்தோடும் மற்ற மனிதர்களோடும் கண்ணுக்கு தெரியாத பாச கையிற்றால் பிணைக்க பட்டவனே ஆவான் மனித வாழ்வு என்பது கீழ்த்தரமானது அல்ல அது புனிதமானது இறைவனது படைப்பில் மிகவும் அரிதானது மனித வாழ்வு எனவே அதை எக்காரணத்தை முன்னிட்டும் இகழ கூடாது இறைவனை அடை வதற்கு மனிதனுக்கு கொடுக்க பட்டிருக்கும் மிக பெரிய கோடையே வாழ்க்கை ஆகும்.




கடலை கடந்து அக்கறையை அடைவதற்கு ஓடம் எப்படி பயன்படுகிறதோ அதே போலவே மனித வாழ்வை புனித மிக்கதாக லட்சியம் கொண்டதாக ஆக்குவதற்கு அவனது உடல் பயன்படுகிறது. எனவே உடல் என்பது உணர்வுகளால் மனிதனை பந்த பாச தலைக்குள் பிணைக்க வைக்கும் இழிவான கருவி அல்ல மாறாக அதுவும் உயர்ந்ததே. காரணம் உயிர் எப்படி இறைவனால் படைக்க பட்டதோ அது போலவே உடலும் இறைவனால் படைக்க பட்டது இறைவனால் கொடுக்க பட்ட எதுவும் இழிவானது என்று கருதகூடியதாக இருக்காது மனித னது உடலில் பிரபஞ்சத்தின் மொத்த சக்திகளும் சிறிய அளவில் நிறைந்திருப்பதாக குருக்கிரந்தத்தில் ஒரு பாடல் இருக்கிறது அதில் ஆத்ம விடுதலையை நோக்கி யாத்திரைகள் மேற்கொள்வது தீர்த்தங்கள் ஆடுவது விரதங் கள் மேற்கொள்வது ஆகியவற்றை விட தன்னிலே ஒளிந்திருக்கும் உண்மையை கண்டறியும் உழைப்பே மேலானது என்றும் சொல்லபட்டிருக்கிறது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

மீரி, பீரி கோட்பாட்டை போலவே சீக்கிய சமயத்தில் ஹௌமைன் என்ற கோட்பாடும் சிறப்பு வாய்ந்ததாகும். ஹௌமைன் என்ற வார்த்தைக்கு நான் எனது என்பது பொருளாகும் அதாவது அகங்காரம் ஆணவம் தனித்துவம் ஆகிய வற்றை இது குறிக்கும் மனித வாழ்வில் உண்மையை நோக்கிய பயனத்திற்கு இத்தகைய அகங்கார புக்திகள் தடையாக இருக்கிறது. அரசர்கள், புரோகிதர்கள் சில துறவிகள் இத்தகைய அகங்கார வசப்பட்டு செய்ய கூடாதவைகளை செய்து மக்களையும் தங்களையும் கீழ்நிலை படுத்துகிறார்கள். வானத்தில் உயரத்தில் பறக்க வேண்டிய காற்றாடி அறுந்து விழுவதற்கு பலகீனமான மாஞ்சா கயிறு எப்படி காரணமாக இருக்கிறதோ அப்படியே இறைவனை நோக்கிய மனித பயணம் சகதியில் வீழ்வதற்கு ஹௌமைன் என்ற ஆணவம் காரணமாக இருக்கிறது. எனவே முன்னேற துடிக்கும் எந்த மனிதனும் ஆணவத்தின் வசம் சிக்கிவிட கூடாது என்று சீக்கியம் எச்சரிக்கை செய்கிறது.

மனிதன் தான் வேறு உலகம் வேறு இறைவனும் வேறு என்று நினைத்ததனாலே மற்றவைகளை தனது ஆட்சிக்கு கொண்டு வந்து அனுபவிக்க வேண்டும் என ஆசை படுகிறான். உண்மையாவே தான்தான் இவை அனைத்துமாக இருக்கிறோம் என்ற ஞானம் அவனுக்கு இருந்தது என்றால் மற்றவற்றை வலிந்து பெற போராட வேண்டிய அவசியம் இல்லை ஆசையில் வீழ்ந்து அவதிப்பட வேண்டிய தேவையும் இல்லை.

தன்னை உணர்ந்து தனக்குள் இருக்கும் இறைவனை உணர்ந்து அதனுள் ஐக்கியமானவனை வைதீக தர்மம் முக்தி பெற்றவன் என்று அழைக்கிறது. தன்னையும் தன்னை சூழ்ந்துள்ள அனைத்து உயிர்களையும் தன்னை போலவே நேசிக்கும் மனோபாவம் பெற்ற ஞானியை ஜைனம் தீர்தங்கன் என்று பாராட்டுகிறது.

புலன்களை ஒடுக்கி ஆசையை வென்று ஞானம் பெற்றவனை புத்தன் என்று போற்றி வணங்குகிறது பௌத்தம். ஆணவத்தை கொன்று நிஷகாமிய கர்மம் என்ற ஆசையற்ற செயல்களை செய்து தன்னையும் மற்றவனையும் இறைவனின் அம்சமாகவே காணுகின்ற உயர்ந்த மனிதனை சீக்கிய சமயம் குருமுகன் என்று அழைத்து பணிந்து வணங்குகிறது.

மனிதனாக பிறந்தவன் தேடி சோறு நிதம் தின்று பல சின்னஞ்சிறுகதைகள் பேசி மனம் வாட பல செயல்கள் புரிந்து பெருங் கூற்றுக்கு இறையன பின்மாயும் வேடிக்கை மனிதனாக இல்லாமல் தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைத்து தான் வாழ்ந்த நாட்டையும் வீட்டையும் உலகத்தையும் சமமாக இறைவனாக கருதி செயற்கரிய செயல்களை மக்களுக்காக செய்து இறந்த பிறகும் இறவாத தன்மை பெரும் குருமுகனாக ஒவ்வொருவனும் மாற வேண்டும் வாழ வேண்டும் என்பதே சீக்கிய சமய பிரிவின் மிக முக்கிய கோட்பாடாகும். இவைகளை பார்க்கும் போது இந்து மத தத்துவங்கள் எதுவும் மற்ற கருத்துக்களை பின்பற்றுவர்கள் அனைவரும் சாத்தானின் குழந்தைகள் அவர்களை ஒழித்து கட்டுவதே இறைபணி என்று சொல்லாமல் அனைவரும் இறைவனது குழந்தைகளே அவனது வடிவமே ஆகும் என்று சொல்கிறது என்பதை மிக எளிமையாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!




நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

# ஆன்மிகமலர் மெயில் புக்



## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்











# இரண்டு வகை பஞ்சாங்கம்

e-magazine
aanmeegamalar.com

1. வாக்கிய பஞ்சாங்கம்.
2. திருக்கணித பஞ்சாங்கம்.

வாக்கிய பஞ்சாங்கத்திற்கும், திருக்கணித பஞ்சாங்கத்திற்கும் அதிகபட்சமாக 6 மணி 48 நிமிடம் வரை வேறுபாடு ஏற்படும்.

அமாவாசை, பௌர்ணமி தினங்களில் இந்த வேறுபாடு மிகக்குறைவாக இருக்கும். அஷ்டமி, நவமி தினங்களில் இந்த வேறுபாடு அதிகமாக இருக்கும்.

ஆன்மிகமலர்.காம்

## வாக்கிய பஞ்சாங்கம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து வந்த ரிஷிகள் ஒன்றுக்கூடி தங்களுக்குள் இருக்கும் கருத்துக்களை பரிமாறி இயற்றிய ஸ்லோகங்களில் உள்ள கணிதமுறையை அப்படியே ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் இன்றளவும் எழுதப்படுவது வாக்கிய பஞ்சாங்க மாகும்.

காலமாற்றத்தினால் எவ்விதமான மாற்றத் திற்கும் உட்படாத, அதாவது திருத்தப்படாத பஞ் சாங்கமாக வாக்கிய பஞ்சாங்கம் வெளிவருகிறது. நம் முன்னோர்களின் கருத்துக்களையும் அவர் கள் பின்பற்றிய கணிதமுறைகளை இன்றளவில் எள்ளளவும் மாற்றாமல் பழமையை பிரதிபலிக்கும் பஞ்சாங்கம் வாக்கிய பஞ்சாங்கமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள திருத்தலங்களில் இறைவழிபாடுகள் யாவும் வாக்கிய பஞ் சாங்கத்தின் அடிப்படையில் பின்பற்றப்படுகின்றன.

## திருக்கணித பஞ்சாங்கம்


18ஆம் நூற்றாண்டிற்கு பிறகு தொலைநோக்கி உதவியின் மூலம் கிரகநிலைகளையும், சந்திரனது சுழற்சி பாதையில் ஏற்படும் சிறு சிறு வித்தியாசத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு எழுதப்பட்ட பஞ்சாங்கம் திருக்கணித பஞ் சாங்கமாகும்.

சந்திரனுக்கு ஈர்ப்பு விசை குறைவு என்பதால் மற்ற கிரகங்களின் ஈர்ப்பு விசைக்கு ஆட்படுவதால் சந்திரனின் வட்டப்பாதையில் அவ்வப்போது வேறுபாடு ஏற்படுவதுண்டு.

ஆன்மிகமலர்.காம்


லஹரி அயனாம்சத்தை அடிப்படையாக கொண்டு பின்பற்றப்படும் மற்றும் கணித முறைகளில் சில மாற்றங்களை திருத்தி செய்து வெளியிடப்படும் பஞ்சாங்கம் திருத்தப்பட்ட கணிதம் அல்லது திருக்கணித பஞ்சாங்கம் ஆகும். பெரும்பாலான ஜோதிடர்களால் திருக் கணித பஞ்சாங்கத்தின் மூலம் ஜாதகம் கணிக்க மற்றும் ஜாதக பலன் உரைக்க பயன்படுத்தப் படுகின்றது.

– எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி
செல்–9750333265




## கும்பகோணத்தில் அன்னபிரசன்ன ஸ்தலம்

# குழந்தைகளின் சளிப்பிரச்சனை போக்கும் திங்களூர்



தமிழகத்தின் காசி என்று அழைக்கப்படுவது கும்பகோணம், இந்த ஊரில் உள்ள சிறப்புகள் பல வெளியே தெரியாமல், தெரியப்படுத்தாமல் மறைக்கப்பட்டதால், மனிதகுலத்திற்கு பயனுள்ள பல்வேறு விஷயங்களை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் பார்க்கும்போது பொதுவாக குழந்தைகளுக்கு அன்னபிரசன்னம் என்னும் நிகழ்வை செய்வதற்கு நாம் அனைவரும் கேரள மாநிலம் குருவாயூர் ஸ்தலத்திற்கு சென்று செய்துவருகிறோம்.

ஆனால் அந்த ஸ்தலத்தில் செய்யப்படும் அன்னப்பிரசன்னம் நிகழ்வைவிட பல மடங்கு பலன் தரக்கூடிய ஸ்தலம் நமது கும்பகோணத்தில் உள்ளதை நாம் இன்னும் அறியாமலேயே விட்டு விட்டோம்.

கும்பகோணத்தைச் சுற்றியுள்ள நவகிரக ஸ்தலங்களில் குறிப்பிடத்தக்கது திங்களூர்,

e-magazine
aanmeegamalar.com









aanmeegamalar.com

இத்தலம் கைலாசநாதரை மையமாக வைத்து சந்திரபகவானுக்குரிய ஸ்தலமாகவும், நவக் கிரகங்களில் சந்திரனின் அனுக்கிரக ஸ்தலமாகவும் திகழ்கிறது.

இத்தலத்தில் பல்வேறு சிறப்புகள் உள்ளது, இத்தலத்து ஈசனையும், சந்திரனையும் வணங்கி னால், பித்து பிடிக்கும் மனோநிலையில் இருப்பவர்களுக்கு பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

பொதுவாக சந்திரன் மனோகாரகன் என்று கூறுவார்கள், அந்தவகையில் பிரம்மாவின் சாபத்தால் சந்திரனுக்கு ஏற்பட்ட தொழுநோயை தீர்க்க, கைலாசநாதராக சிவபெருமான் தோன்றி, சந்திரனின் சாபத்தை போக்கி அனுக்கிரகம் செய்ததால், இத்தலம் அனுக்கிரகஸ்தலமாக போற்றப்படுகிறது.







இத்தலத்தில் இன்னும் பல்வேறு சிறப்புகள் உள்ளது, சிவனை வணங்கி நாயன்மார் களானவர்கள் உண்டு, ஆனால் நாயன்மாரையே வணங்கி நாயன்மாரான வரலாறு நிகழ்த்தப்பட்ட ஸ்தலம் இது.

சிவபெருமான் மீது பக்தி இருந்தால்தான் சிவனின் கடாட்சம் கிடைக்கும் என்பதல்ல, சிவனின் பக்தர்களையும் சிவனாகவே போற்றி வணங்கினாலும், சிவன் அருள் கிடைக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அப்பூதியடிகள் நாயன்மாரை சிவலீலை மூலம் உலகிற்கு அறிமுகப்படுத்திய ஸ்தலம் இந்த திங்களூர் சந்திர ஸ்தலம்.

இத்தலத்திற்கு பல்வேறு சிறப்புகள் இருந் தாலும், மிக முக்கியமான ஒரு சிறப்பு உள் ளது, பிறந்த குழந்தைக்கு இத்தலத்தில் அன்னப் பிரசன்னம் செய்து வைத்தால், அக் குழந்தைக்கு சளித் தொந்தரவு ஏற்படாது என்பது ஐதீகம்.

இதனால் குழந்தைக்கு ஆரோக்கியமும், அறிவும் குன்றாமல் கிடைக் கும் என்பது இத் தலத்தின் சிறப்புகளில் ஒன்று.



இங்கு அன்ன பிரசன்னம் எவ் வாறு செய்ய வேண்டும் என்றும் புராணங் களில் தெளிவாக கூறப்பட்டுள்ளதாக குறிப்புகள் உள்ளது.

வெள்ளி கிண்ணத்தில், அன்னத்துடன் நெய், தேன் கலந்து பௌர்ணமி நிலவை பார்த்தவாறு இத்தலத்தில் இருந்து குழந்தைகளுக்கு ஊட்டி விடவேண்டும்.

அவ்வாறு நிலவை பார்க்க இயலாத நிலை ஏற்பட்டால், பசுமாட்டை பார்த்தவாறு இத்தலத்தில் குழந்தைகளுக்கு அன்னத்தை ஊட்டிவிட வேண்டும்.


இவ்வாறு அன்னப்பிரசன்னம் செய்யப்பட்ட குழந்தைக்கு சளியால் ஏற்படும் அவதி ஏற்படுவ தில்லை என்பது இன்றளவும் கண்கூடாக நடை பெறுகிறது.

விஷயம் தெரிந்தவர்கள் இன்றும் இத்தலத் தில் பௌர்ணமி தினத்தில் குழந்தைகளுக்கு அன்னப் பிரசன்னம் செய்துவருகின்றனர்.

இத்தலத்திற்கு எவ்வாறு செல்லவேண்டும் என்பதை பார்ப்போம், கும்பகோணம் பேருந்து நிலையத்திலிருந்து பாபநாசம், ஐயம்பேட்டை வழியாக 33 கி.மீ தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து சுமார் 1 மணி நேரத்தில் திங்களூரை அடைந்து விட முடியும்.

– கீதாராஜன்

தொ.பே.எண்: 9444228203



கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 176 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

e-magazine
aanmeegamalar.com



# 2024 வைகாசி மாத பலன்கள்

e-magazine
aanmeegamalar.com

வணக்கம், சோபகிருது ஆண்டு வைகாசி மாதம், மே 15ம் 2024 தேதியில் பிறக்கிறது. சூரியன் ரிஷப ராசிக்கு பெயர்ச்சியாகிறார். சூரியன் மற்றும் குரு பகவான் உடன் இனைந்து இந்த வைகாசி மாதம் தொடங்குகிறது. புதன் மற்றும் சுக்ரன் மேஷ ராசியில் அமர்ந்திருக்கிறார். சனி கும்ப ராசியிலும், ராகு, செவ்வாய் மீன ராசியிலும். கேது கன்னி ராசியிலும் தொடர்கிறார்கள்.

இந்த கிரக அமைப்பை பொருட்டு, இனி ராசியின் அடிப்படையில் பொதுவான வைகாசி மாத பலன்களை காணலாம்.

ஆன்மிகமலர்

## மேஷம்

முன்பு போல் இல்லாமல், உங்கள் பேச்சுக்கு மதிப்பும் மற்றும் மரியாதை உயரும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றும் வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல முறையில் மாற்றம் ஏற்படும்.

## ரிஷபம்

இந்த மாதம் கிரஹ அமைப்பினால் சில இடைறுகளை சந்திக்க நேரிடும். உங்கள் விருப்பத்திற்கு மாறான பல காரியங்கள் நடக்கலாம். குல தெய்வ வழிபாடு மிக முக்கியம். உங்கள் காரிய வெற்றிக்கு தேவையான உதவி கிட்டும்.

## மிதுனம்

அதிகப்படியான பயணங்களை மேற்கொள்ள வேண்டிவரும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் மற்றும் குடும்பத்தில் இருந்த பண தடை நீங்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும் மற்றும் உடல் நிலையை கண்காணித்து கொள்ளவும்.

## கடகம்

நினைத்த காரியம் ஈடேறுவர்த்திக்கான அணைத்து கிரஹ அமைப்பும் சாதகமாக உள்ளது. தடை பெற்ற அனைத்து சுப காரியங்களையும் துவங்க உங்களை தயார் படுத்தி கொள்ளுங்கள். உத்தியோகத்திலும் இதை சிறப்பான மாதம் என கருத்தில் கொள்ளலாம்.

## சிம்மம்

பலம் பெற்ற 10ம் வீடு அமைய பெற்ற காரணத்தினால், தொழிலில் முன்னேற்றம்





No.:2 Raghava Lakshmy
Apartments, Raghavan street,
Bhavani Nagar, Ayapakkam,
Chennai - 600077.
+91 7339175496
sudancool2001@gmail.com

ஏற்பட ஒரு சிறப்பான மாதமாக இருக்க போகிறது. இது நாள் வரை செய்த அனைத்து கடின உழைப்பிற்கும் இந்த மாதம், பதவி, பணம், நல்ல பெயர் மற்றும் புகழ் அனைத்தும் தேடி வரும்.

## கன்னி

குலதெய்வ வழிபாடு உங்களுக்கு நல்ல பலனை கொடுக்கும். வெளிநாடு மற்றும் வெளிமாநில தொடர்பு போன்றவை உங்களுக்கு லாபமாக அமையும். கன்னி ராசியை பொறுத்தவரை முன்னேற்றம் படி படியாக உங்களை தேடி வரும்.

## துலாம்

வியாபாரத்தில் முதலீடு செய்தால் நிச்சயமாக லாபம் உண்டு. திடீர் அதிர்ஷ்டம் தன வரவும் தாராளமாக இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தின் மூலமாக நல்ல லாபம் உண்டு. சிறப்பான மாதமாக கொள்க.

## விருச்சகம்

திருமணம், உத்யோகம் மற்றும் தொழிலில் சிறப்பான பலன் காணலாம். ராசிக்கு நட்புகரமான சூரியன் எழில் குரு உடன் சேர்ந்து உள்ளதால் உங்களுடைய பேச்சுக்கு மிகப்பெரிய அங்கீகாரம் கிடைக்கும். சிறப்பான மாதமாக கொள்க.

## தனுசு

புதிய உத்யோகம் மற்றும் புதிய வாய்ப்புகள் உங்களை தேடி வரும். வருமானம் மற்றும் செலவு இரண்டு மடங்காக இருக்கும். இந்த விஷயத்தில் கவனம் தேவை. சோர்வான உங்களுக்கு இந்த மாதம் ஒரு விடிவெள்ளியை போல் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு பலம் பெற்ற காரணத்தினால், நீண்ட தூர பிரயானங்களின் மூலமாக ஆதாயம், புகழ் மற்றும் மரியாதை கூடும். தெளிவான சிந்தனை உண்டாகும் மற்றும் தொட்டது எல்லாம் துலங்கும்.

## கும்பம்

திருமண பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும். நண்பர்கள் மூலமாக வெற்றி உண்டு. கூட்டு தொழில் மூலமாக வியாபார லாபம் மற்றும் வருத்தி உண்டாகும். எதிர்பாராத நண்பர்களால் திடீர் அதிஷ்டம் அதனால் பெரிய லாபமும் உண்டாகும்.

## மீனம்

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்ற விதியின் அடிப்படையில். இந்த மாதம் புகழ், வெற்றி மற்றும் சமூக அந்தஸ்து உயர போகிறது, வெற்றி உங்களை தேடி வரும். இந்த மாதம் உங்களுக்கு ஒரு சிறப்பான மாதமாக கருத்தில் கொள்க.



ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

ஆன்மிகமலர்மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

173 க்கும் மேற்பட்ட

இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.




e-magazine
aanmeegamalar.com



# இந்திரனின் நோய் தீர்த்த சுந்தரப் பெருமாள்

பரந்தாமனாகிய ஸ்ரீமன் நாராயணர் இந்த பூமியில் புரிந்த லீலைகள் எண்ணிலடங்காதவை. அழகின் இலக்கணமாகத் திகழும் அந்த அழகர் பெருமாள் குடிகொண்டு அருளும் திருத் தலங்களும் இம்மண்ணில் எண்ணற்றவை.

சுந்தரம் என்றால் அழகு என்பது பொருளாகும். சௌந்தரம் என்பதும் அழகையே குறிக்கும். அப் படி சுந்தரனாக, பெருமாள் வீற்றருளும் ஓர் அற்புத க்ஷேத்திரம்தான் சுந்தரப் பெருமாள் கோவில்.

ஆதியில் இந்த திருத்தலம் சுந்தரவனம் என்றும் சமீவனம் (வன்னி மரக்காடு) என்றும் போற்றப்பட்டுள்ளது.







பஞ்ச நதிகள் என்று போற்றப்படும் காவிரியாறு, அரசலாறு, குடமுருட்டியாறு, திருமலைராஜன் ஆறு மற்றும் முடிகொண்டான் ஆறு ஆகிய ஆறு நதிகளுக்கு நடுவே இங்கு ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயாருடன் எழுந்தருள் புரிகின்றார் ஸ்ரீ சௌந் தரராஜப் பெருமாள்.

ஒரு சமயம் இந்திரனுக்கு சாபத்தால் வெண்குஷ்ட நோய் ஏற்பட்டது.

அதோடு, தனது இந்திரபதவியையும் இழந் தான். சாதாரண மானுடனாக மாறி, இப்பூவுலகைஅடைந்தான். விமோ சனம் வேண்டி அலைந்துத் திரிந்தான். பின் இச்சுந்தரவனத்தைஅடைந்த இந்திரன் நாரதரின் தரிசனம் கிடைக்கப்பெற்றான்.

அவர் இந்திரனுக்கு"360 வெண் பூசணிக்காய்களை தினமும் ஒரு அந்தணர் வீதம் 360 அந்தணர் களுக்கு தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் வெண்குஷ்ட நோய் நீங்கும் என்று ஆலோசனைக் கூறினார்.

அதன்படி வெண்பூசணிக்காயை தினமும் ஓர் அந்தணர் வீதம் கொடுத்து வந்தான் இந்திரன். ஒருநாள் அந்தணர் யாரும் கண்ணுக்கு தென்படவில்லை. பல இடங்களில் தேடியும் அந்தணர் ஒருவரும் அகப்படவில்லை.

மிகவும் மனம் வருந்தினான் இந்திரன். எம் பெருமான் ஸ்ரீமன் நாராயணரை வேண்டி நின்றான். மனமிறங்கிய மலையப்ப சுவாமி ஓர் ஏழை அந்தணராக இந்திரன் முன் வந்து நின் றார். மனம் மகிழ்ந்த இந்திரன், அவருக்கு வெண்பூசணியை தானம் செய்தான். என்னே ஆச்சரியம் ??? உடன் தனது வெண்குஷ்ட நோய் நீங்கப்பெற்று, பழைய நிலையை அடைந்தான் தேவேந்திரன்.

திருமாலும் தனது அந்தண ரூபத்தை மாற்றிக்கொண்டு, பன்னீர் மரத்தடியில் சௌந்தரவல்லி தாயாருடன் சௌந்தரராஜ பெரு மாளாக, சுந்தர ரூபத்தில் காட்சி அருளினார். மனம் மகிழ்ந்த மகேந் திரன், தாங்கள் இங்கு வீற்றிருந்து சேவை சாதித்தருள வேண்டும் என்று வேண்டினான். அப்போது



மோ.கணேஷ்

e-magazine
aanmeegamalar.com



சூரிய சந்திரர்கள் சாமரம் வீசிட...முப்பது முக்கோடி தேவர்களுடன், ஸ்ரீருத்ரரும், பிரம்மாவும் உடனிருந்து இந்திரனுக்கு ஆசி வழங்கினர். இந்த ஆனந்த கோலாகலம் நடைபெற்றது இந்த சுந்தரவனம் என்னும் சுந்தரப் பெருமாள் கோவி லில்தான்.

ஊரின் உட்புறம் உயரிய மதில்கள் கொண்டு, ஏழு கலசங்களுடனான ஐந்து நிலை இராஜகோபுரம் கிழக்கு பார்த்தவாறு கம்பீரமாக காணப்படுகின்றது. உள்ளே... முதலில் ஸ்ரீ தும்பிக்கை ஆழ்வாராக கணபதி இராஜகோபுரத்தின் கீழே வடக்கு முகமாக காட்சி தருகின்றார். வெளிப்புறத்தில் நந்தவனம் அமைக்கப்பட்டு, மிகவும் ரம்மியமாக உள்ளது. தென்கிழக்கில் மடப்பள்ளியுள்ளது.

நேராக பலிபீடமும், துளசிமாடமும் உள்ளன. பின் ஸ்ரீ கருடாழ்வார் கரம்குவித்தபடி வணங்கி நின்றுள்ளார். பின்னர் சிற்ப வேலைகளுடனான முகமண்டபம் காட்சிக்கின்றது. அடுத்ததாக இரண்டாம் வாயிலும், அதன் மேலே சிறிய மூன்று நிலை கோபுரமும் காணப்படுகின்றது. உள்ளே செல்ல...நான்கு கால் மண்டபம் அழகூட்டுகின்றது. இடது புறம் கொலு மண்டபம் காணப்படுகின்றது. வலப்புறம் ஸ்ரீ விஷ்வக்ஷேனர் என்னும் முதலியாண்டாரின் தனிச் சன்னிதி உள்ளது. பக்கத்தில் ஸ்ரீ யோகநரசிம்மர், ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் ஸ்ரீ அனுமன் சன்னிதிகள் உள்ளன. தொடர்ந்து ஆழ்வார்களின் தரிசனத்தையும் காண்கிறோம்.

நடு மத்தியில் மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை ஆகிய அமைப்பினில் பெருமாள் சன்னதி அமைந்துள்ளது. கருவறையில் கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு ஸ்ரீதேவி பூதேவியர்களுடன் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் அழகே வடிவாய் அருட்காட்சி அருள்கின்றார். மும்மூர்த்தி ஸ்தலமாகத் திகழும் இப்பதியில் வடக்கு முகமாக பிரம்மாவும், தென்முகமாக ஸ்ரீ ருத்ரரும் அருள்பாலிக்கின்றனர். பெருமாளுக்கு பின்புரம் சூரியனும், சந்திரனும் சாமரம் வீசிக் கொண்டிருக்கின்றனர். தேஜோமயராய், அதிரூப சுந்தரனாய்த் திகழும் இப்பெருமாளை முப்பத்து முக்கோடி தேவர்களும், 41,000 ரிஷிகளும் மலர்த்தூவி வணங்கி நிற்பதாக ஐதீகம் உள்ளது. சகல சௌபாக்கியங்களும் வழங்கும் மூர்த்தியாக இங்கு சேவை சாதித்துக் கொண்டிருக்கின்றார் திருமால். தினமும் சூரிய ஒளியானது பெருமாள் மீது படர்வது ஓர் தனிச்சிறப்பாகும்.

பெருமாள் சன்னதிக்கு வலதுபுறம் ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயார் சன்னிதி கொண்டு அருள்பாலிக்கின்றாள். ஆண்டாள் சன்னிதி இடதுபுறம் அமைந்துள்ளது. ஆண்டாள் சன்னதிக்கு வெளிப்புறம் தென்முகமாக சிறிய வடிவில், திருமாலிருஞ்சோலை என்னும் அழகர்கோவிலில் காட்சி தருவது போல் ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பர் அருள்புரிகின்றார். இவரிடம் எவ்வித வேண்டுதல் வைத்தாலும் விரைவில் நடந்திடும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும். இது உட்பிராகாரமாகும்.

அழகிய ஆலயம். சோழர்களின் கலைப் பொக்கிஷமாக திகழ்கிறது. மாதாமாதம் வரும் திருவோண நட்சத்திரத்தன்று பெருமாளுக்கு திருமஞ்சன சேவை நடைபெறுகின்றது.

நவராத்திரி, கிருஷ்ண ஜெயந்தி ஆகிய வருடாந்திர விசேடங்கள் மட்டுமே இங்கு அனுசரிக்கப்படுகின்றன. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயம் தினமும் காலை 6 மணிமுதல் 10 மணிவரையும், மாலை 5 மணிமுதல் வரை 7 மணிவரையும் திறந்திருக்கும்.

குழந்தை இல்லா தம்பதிகள் தாயாருக்கு வளையல்கள் சாற்றி வழிபட, ஒரு வருடத்திற்குள் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பல்வேறு நோய்களால் அவதிப்படுபவர்கள், பெருமாளுக்கும், தாயாருக்கும் அவர்களது நட்சத்திரத்தன்று திருமஞ்சனம் செய்து, வெண்பூசணிக்காயை தானம் வழங்கிட, தீராத நோய் தீர்ந்து போகும்.

மிகப் பழமை வாய்ந்த இவ்வாலய திருப்பணி தற்போது தொடங்கப்பட்டுள்ளது. அன்பர்கள் இதில் கலந்துகொண்டு, பெருவாரியான திருப் பணிகளை செய்து மேன்மையுற வேண்டு கின் றோம்.

வழி: கும்பகோணத்தில் இருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இத்தலம் பாபநாசத் திற்கு அருகே 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ளது. ஆலய தொடர்புக்கு: ஆராவமுதன் பட்டர்: 9092399553.

– பழங்காமூர் மோ கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

e-magazine
aanmeegamalar.com

# தித்திக்கும் பழமொழிகள்

அதிகம் பேசாதவனை உலகம் அதிகம்விரும்பு கிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழு கிறது.

●●●

கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செல விடுங்கள்.

●●●

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

●●●

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனி தனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

●●●

சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.

●●●

மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.

●●●

உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக் கப்படுகிறது.

ஆன்மிகமலர்

●●●

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என் பதைப் பொறுத்தது ஆகும்.

●●●

எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.

●●●

அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல; விடாமுயற்சியினால் தான்.

●●●



முன்நோக்கி செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்நோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

●●●

ரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும், துக்கத்தை வெளிப்படுத்தாதவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது.

●●●

எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.

●●●

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந் துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

●●●

எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.

●●●

ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.

●●●

செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒரு போதும் உதவி செய்யாது.

●●●

சண்டைக்குப் பின் வரும் சமாதானத்தைவிட, என்றும் சண்டையே இல்லாத சமாதானம்தான் வேண்டும்.

●●●

19. நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சயமில்லை; இன்றைக்கு மட்டுமே நம் கையில்.

●●●

மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல.

●●●

பழமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.

●●●

வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி, அழகான பசி. ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.

●●●

நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்குக் கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்குத் தகுதியானது உங்களுக்குக் கண்டிப்பாகக் கிடைத்தே தீரும்.

●●●

அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.

●●●

தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.

# தன்வந்திரி பெருமான்



தன்வந்திரி என்று சொல்லப்படுபவர் வானத்தில் வசித்து வருபவர். அதாவது சூரிய பகவானே தன்வந்திரி என்றும் புராணங்களில் ஒரு குறிப்பு உள்ளது.

அதனால் ஞாயிறு மற்றும் வியாழக் கிழமைகளில் இவரை வழிபடுவது நல்லது.தன்வந்திரிதான் ஆயுர்வேதத்தை சிருஷ்டித்தார் என்கிறது மத்ஸ்ய புராணம்.

இவரை வைத்திய ராஜா ஆதர்ச மருந்துவர் இன்றும் குறிப்பிடுகிறது.

கீழ் இரு திருக்கரங்களில் ஒன்றில் அட்டைப் பூச்சியையும் மற்றொன்றில் அம்ருத கலசத்தையும் தாங்கிக் காணப்படுவார்.

துளசி ஆலிலை அரசு இலை வில்வம் விஷ்ணு கிராந்தி நாயுருவி மருக்கொழுந்து பூர்ஜ இலை தேவ தாரு இலை போன்ற இலைகளும் செவ்வந்தி சண்பகம் பிச்சி பாரிஜாதம் தாமரை அரளி புன்னைப்பூ மந்தாரை போன்ற பூக்களும் இவரது பூஜைக்கு உரியவை மகாவிஷ்ணுவுக்குப் பிடித்தமான கோதுமை அல்வா அல்லது சுக்குவெல்லம் செய்து தன்வந்திரிக்கு நைவேதிப்பது சிறந்தது.

e-magazine
aanmeegamalar.com

# பக்தனாவதற்கு உதவும் இறைவனின் திருநாமம்

சீடன்: கடவுளைப் பார்க்க வேறு உதவிகள்?

ஞானி: கடவுளைப் பார்க்க இரண்டு தொழில்கள் உள்ளது. ஒன்று உடல், கண், காது என்ற வெளித்தொழிற்சாலை. இரண்டாவதாக மனது என்ற உட்தொழிற்பட்டறை.

சீடன்: இதை உபயோகித்தால் பக்தர்கள் ஆகிறார்களா?

ஞானி: கர்மேந்திரியத்தின் முழு உபயோகத்தை அறிந்தவர்கள் பக்தர்கள் ஆவார்கள்.

சீடன்: இந்த உதவிகளால் அனைவருக்கும் இலாபம் தானே?

ஞானி: ஆமாம். ஆனால் உதவியைப் பெற்றுக் கொண்ட மனிதன் பயத்தை விடுதல் வேண்டும். அப்பொழுது தான் அவன் உதவியை உபயோகித்துக் கொண்டான் என்று அர்த்தம்.

சீடன்: இது விக்கிரக தரிசனத்திலும் கிடைக்கும் அல்லவா?

ஞானி: உண்மை. விக்கிரக தரிசனத்தில்கிடைப்பது ஆத்ம தரிசனம்.

சீடன்: எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பார்ப்பதில் ஞானிகள் அடைவது என்ன?

ஞானி: வருகின்ற மக்களின் திருப்தியைப்பார்ப்பவன் மஹான். அதில், அந்தத் தொண்டில் திருப்திடைகிறான்.

சீடன்: மனிதனின் நிலை என்ன?

ஞானி: மனிதன் தன் அதிருப்தியை வெளிப்படுத்துகிறான். அது அவனிடமே, அடுத்தவரிடம் இருந்து திரும்பி வருகிறது. திருப்தியை மனிதன் சந்திக்கும்பொழுதே ஞானியாகிறான்.

சீடன்: அந்த சூழ்நிலை அமைதியாக இருக்குமல்லவா?

ஞானி: அது தான் இயற்கையான சூழ்நிலை மனித குலத்திற்கு. கடவுள் அருளால் கிடைப்பதால் அமைதி கிட்டும்.

சீடன்: மெய்யன்பர்களுக்கும், ஞானிகளுக்கு மிடையே ஒரு இடைவெளி காணப் படுகிறதே?

ஞானி: ஆம் அந்த இடைவெளி தான் கடவுள். பக்தி செய்! நானும், நீயும் ஒரே இடத்தில் இருக்கலாம்.

சீடன்: உங்கள் சன்னதியிலேயே இது எளியவனுக்கு கிட்டுமா?

ஞானி: அது உன்னிடம் அல்லவா உள்ளது. பரிணாம வளர்ச்சியில் எங்கேநின்றால் பக்தனாவோம் என்பதை குருவின் சன்னதியில் உணருகிறாய். ஆண்டவனின் திருநாமம் இதற்கு உதவுகிறது. பக்தி செய், பலன் கிட்டும்.

சீடன்: என்னை நினைவில் வைத்துக் கொள்வீகளா?

ஞானி: நினைவில் எப்பொழுதும் நம்மை வைத்துக் கொள்பவர்களிடம் நமக்கு அன்பு உண்டாகிறது. ஞானிகளும், கடவுளும் உண்மையான தொண்டனை, பக்தனை மறப்பதில்லை.

சீடன்: எந்த மதக் கடவுளையும் வணங்கலாமா?

ஞானி: அது உன் மனப் பக்குவத்தைப் பொறுத்தது. முசல்மானாகப் பிறந்து கிருஷ்ண பக்தி செய்தார் இலத்தீப் சுவாமி கள். அதனால் இழுக்கு ஏற்பட்டது அவருக்கல்ல. அவரை குற்றம் சொன்னவர்களுக்கு.



சீடன்: இது ஹிந்துவுக்கும் பொருந்து மல்லவா?

ஞானி: உலகிலுள்ள எல்லா பக்தர்களுக்கும் இது பொருந்தும்.

சீடன்: ஆனால் இதை

ஆன்மிகமலர்



e-magazine
aanmeegamalar.com

சமுதாயம் ஏற்காதே?

ஞானி: அதைப் பற்றி உனக்கென்ன கவலை? உன் அழுக்கைதுடைக்க முயலும்போது அடுத்தவர் அழுக்கை துடைக்க முயலாதே, உன் அழுக்கு அப்பொழுது அதிகமாகிறது. ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகளுக்கு இதுவே முக்கிய காரணம்.

சீடன்: இறைவன் இதை விரும்புகிறானல்லவா?

ஞானி: ஏன்? விரும்பினால் நீ உடனே பின்பற்றப் போகிறாயா? அல்லாவைத் தெரிந்தவர்கள் யார்? அல்லா எங்கே என்று தேடினால் உடனே உன் பெயர் அப்துல்லா; இல்லை, உன் பெயர் பக்தன்.

சீடன்: கிருஷ்ண பக்திக்கும் இது பொருந்துமல்லவா?

ஞானி: எல்லா தெய்வங்களும் இதில் அடக்கமே. மனதைக் கொடுக்காமல் கை கால் கண்ணைக் கொடுத்து கேள்விகள் கேட்டு என்ன பலன்?

சீடன்: அழுக்கு போக மறுக்கிறதே?

ஞானி: உயிரின் மீது விருப்பம் உள்ள கடவுள் அழுக்கைப் பார்ப்ப தில்லை. உயிரோடு அழுக்கு ஒட்டுவதில்லை. அதனால் உடனே கடவுளை விரும்பு.

சீடன்: அது போதுமா?

ஞானி: போதும். ஒவ்வொரு மனிதனும் தன்னிடமுள்ள அழுக்கை பக்தி செய்து துடைக்க முயலட்டும். ஜாதிவேண்டுமா, மதம் வேண்டுமா என்பதை கடவுள் பார்த்துக் கொள்வான்.

சீடன்: இப்படி செய்தால் எல்லா பேதங்களும் ஒழியுமே?

ஞானி: நிச்சயமாக. உயிரைச் சுற்றி அறிவே அன்பாக சுற்றும்போது ஆத்மா அன்பே வடிவாக ஆகிறது. அதுவே கடவுள், பக்தி, சமயம் எல்லாம். அப்பொழுது பேதங்கள் எல்லாம் ஒழியும்.

சீடன்: இதை உலகம் உணருமா?

ஞானி: உண்மையான ஆத்மசாதனைக்குச் செல்பவனை ஆண்ட வன் ஒருவனே உணருகிறான்.

சீடன்: இறைவனை நினைவில் கொள்ள இந்த எண்ணம் மட்டும் போதுமா?

ஞானி: இந்த எண்ணம் ஒன்று. கோவில், உருவம், மந்திரம், குரு நாதன் இவைகளும் உதவும்.

சீடன்: இந்த உலக மாயையில் இருந்து விடுபட்டால் தானே இது முடியும்?

ஞானி: மாயையை எடு, நான் விளையாடுகிறேன், பக்தனாகிறேன் என்பது சராசரி மனிதனின் நிலை.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

அழகுராஜா




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

**பஜன்மண்டலியினர்,**

**ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,**

**ஆன்மிக அமைப்புகள்,** **உழவாரப்பணி,**

**கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,**

**அன்னதானம் செய்பவர்கள்,**

**பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்**

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும்
அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப்
பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும்,
தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன்
மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,
உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும்
அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும்,
இணையதள இதழும் பாலமாக செயல்படும்,
கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும்,
அல்லது தொடர்பு கொள்ளவும்.

**வாட்சப் எண்: 9444228203**



# அவனின்றி ஓர் அணுவும் அசையாது

e-magazine
aanmeegamalar.com



கடவுள் நம்பிக்கையும், கடவுள் மறுப்பும் பற்றி பிரபல எழுத்தாளர் சுஜாதா அவர்கள் பிரபல பத்திரிகையில் மிக தெளிவாக எழுதியுள்ளார். நல்ல செய்திகளை தரும் நமது இதழில் அவரின் அந்த கருத்தை மீண்டும் பகிர்வதால் நமது வாசகர்கள் பயன்பெறுவார்கள்...

●●●

சிறுவயதில் கடவுள் மறுப்பு கேள்விகளை நான் என் அப்பாவிடம் கேட்டிருக்கிறேன்.

எப்படி ட்விஸ்ட் செய்து மடக்கிக் கேட்டாலும் அவர் கூறும் பதில், “வயசானா உனக்கே புரியும். புரியும்போது... கேள்விகள் அப்படியே இருக்கும், ஆனால் உனக்குப் பதில் கிடைத்திருக்கும்.!”

இந்தப் பதில் இன்னும் குழப்பும்.

அப்பா.... பதில் கூற முடியாமல் ஏதோ சால்ஜாப்பு செய்கிறார் என்று தோன்றும்.

ஆன்மிகமலர் .காம்

“நீ ஏதோ டபாய்க்கிற.!” என்பேன்.

“நீ சயன்ஸ் படிக்கிற, அதனால் இதை எல்லாம் கேட்கிற. நானும் பிஸிக்ஸ் ஸ்டூடண்ட் தான்”, என்பார்.

அப்பாவுடன் கோயிலுக்குச் செல்லும்போது நல்ல படிப்பு வர வேண்டும், மார்க் நிறைய வர வேண்டும் என்று எல்லாம் வேண்டிக்கொள்ளச் சொல்லமாட்டார், அவர் வேண்டிக்கொள்ளச் சொல்லுவது, “நிறைய அறிவு கொடு” என்று வேண்டிக்கோ”, என்பார்.

இவை எல்லாம்... எனக்குப் புரிந்ததே கிடையாது.

சின்ன வயதில் அவர் சொன்னது...

சில வருடங்கள் முன்.... புளி டப்பாவைத் திறக்கும்போது புரிந்தது.

புளி டப்பாவைத் திறந்தபோது, அதிலிருந்து சின்னப் பூச்சி ஒன்று பறந்தது.

ஏர்டைட்... டப்பர் வேர் புளிடப்பா. மூடியிருக் கிறது ! அதற்குள்.... பூச்சி எப்படி வந்தது என்று யோசித்து தலையைச் சொறிந்தேன்.

நான் சொறிந்துகொள்வதைப் பார்த்துத் தலையில்

என்ன பேனா.?” என்றார்கள்.

தலையில் பேன் எப்படி உற்பத்தி ஆகியது என்று... மேலும்... பலமாகச் சொறிந்து கொண்டேன்.

ஷாம்பு போட்டுக் குளித்தால் அரிப்பு சரியாகி விடும் என்று கூறினார்கள்.

குளித்துவிட்டு பெருமாள் சேவிக்கும்போது சாளரத்தைப் பார்த்தேன்.

எப்படி? யொரு பூச்சி சோறு தண்ணீர் காற்று எதுவும் இல்லாமல் உள்ளே தோன்றியிருக்க முடியும்.? என்று யோசித்தேன்.

மீண்டும் குழப்பம்.

கல்லிலிருந்து பூச்சி எப்படி வந்தது என்பதே தெரியாமல் இருக்க,...

தூணிலிருந்து நரசிம்மன் எப்படித் தோன்றினார் என்று எனக்கு எப்படிப் புரியும்.?

பூச்சிக்குத் தாய் யார் என்று தெரியாமல் முழிக்கும் எனக்கு...

நரசிம்மருக்கு... யார்? தாய் என்று புரிந்து கொள்ள முடியுமா?

இந்தக் கேள்விகளுக்கு ஆழ்வார் பாசுரங்களையும் ஸ்வாமி தேசிகனையும் நாடினேன்.

## ஸ்வாமி தேசிகன்...

நரசிம்மர் தூணிலிருந்து வந்தார், அதனால் அவருடைய தாய்... அந்தத் தூண் தான் என்கிறார்.

தேசிகன் கூறிய பிறகு அதை மறுத்துப் பேச முடியுமா.?

$(a+b)^2 = a^2+2ab+b^2$ என்பதை எப்படிக் கண்ணை மூடிக்கொண்டு நம்புகிறோமோ? அதே போல் ஆழ்வார்கள் ஆசாரியர்கள் எது செய்தாலும் .... அதில் தப்பிருக்காது என்று முதலில் நம்ப வேண்டும்.

ஆசாரியன் கூறிய பிறகு அதை அப்படியே ஏற்றுக்கொள்வது தான் ஞானம்.

வள்ளுவர்

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்கிறார்.

இதற்குப் பொருள், “எந்தப் பொருளை யார் சொன்னாலும், அதன் உண்மைத் தன்மையை அறிவது தான் அறிவு”.

அதாவது பகுத்து அறிவதுதான் பகுத்தறிவு.

ஸ்ரீ வைஷ்ணவத்தில் பகுத்து அறிவதற்கு அறிவு கலங்க வேண்டும்.

எனக்கு அறிவு இல்லை என்று தெரிந்து கொள்வதே அறிவு என்கிறார் நம்மாழ்வார்.

கொஞ்சம் அறிவியல் படித்தவர்கள் கடவுள் பற்றிப் பேசுகிறேன் என்று ... அவர்களின் பி.எச்.டியை வைத்துக்கொண்டு ... கடவுளை ஒரு வரையறைக்குள் அடக்க முயற்சி செய்வதை நாம் பார்த்திருக்கிறோம்.

நம் சிறிய அறிவை வைத்துக்கொண்டு அவனை அளக்கவோ புரிந்துகொள்ளவோ முடியாது.

நம் அறிவு என்பது எவ்வளவு சின்னது என்று, ஒரு கணிதவியலாளர் சொன்ன சோதனை மூலமே சொல்லுகிறேன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரெஞ்சு கணிதவியலாளரான Jules henri poincaré, “சிந்தனைப் பரிசோதனை” என்று ஒரு விஷயத்தைச் சொல்லியுள்ளார்.

இந்தச் சோதனையை யாராலும் செய்து பார்க்க முடியாது. அதனால்...? நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்:



இன்று தூங்கி... நாளை எழுந்துகொள்ளும் போது, இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றும்...

உங்கள் அப்பா, அம்மா, நாய்குட்டி, வீடு, கோயில், செடி, தட்டு, அரிசி, பேனா, பென்சில், சட்டை, அணுக்கள், நீங்கள் படுத்துத் தூங்கும் கட்டில், ஏன்,? நீங்கள் என....

உங்களைச் சுற்றியுள்ள அனைத்துமே பெரிதாகிவிடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

மறுநாள் காலை நீங்கள் எழுந்த பிறகு ... எல்லாம் பெரிசாகிவிட்டது என்று உங்களால் கண்டுபிடிக்க முடியுமா என்றால்...? முடியாது என்கிறார் Jules henri அவ்வளவு தான் நம் அறிவு.

சாதாரணமாக இதையே அளக்க முடியாத போது, பெருமாளை ... இப்படித்தான் என்று பேசுவது எல்லாம் டூமச்.

“ஆலமரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய், ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான், கோல மாமணி ஆரமும் முத்துத் தாமமும் முடிவில்லது ஒரெழில் நீல மேனி ஐயோ நிறை கொண்டது என் நெஞ்சினையே.”

திருப்பாணாழ்வார்

எழு உலகையும் உண்டு, ஒரு குழந்தை வடிவில் ஆலிலையில் படுத்துக்கொண்ட பெருமாள் என்று சொல்லும்போது ....


உலகை உண்ட பிறகு அந்த இலையில் எப்படிப் படுத்துக்கொள்வான் என்று கேள்வி எழும்.

கோவர்த்தன மலையைத் திருப்பிக் குடையாய் பிடித்தபோது அதில் உள்ள நீர் நிலைகளில் தண்ணீர் கீழே சிந்தவில்லையாம், அதே போல மரங்கள் எல்லாம் எப்போதும் போலச் சாதாரணமாக இருந்ததாம்.

( உடனே புவியீர்ப்பு தத்துவம் உங்களுக்கு ஞாபகம் வந்தால், நீங்க இன்னும் கடவுளைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.! )

எப்படி என்று ...இதை எல்லாம் ....யோசிக்கவே முடியாது. முயற்சியும் செய்யாதீர்கள்.!

இதுதான் அகடிதகடனா சாமர்த்தியம். (லிஃப்கோ தமிழ் அகராதியில் “perfectly accomplishing even the impossible” என்று கொடுத்திருக்கிறார்கள்.).



நம் இரைப்பையில் ‘ஹைட்ரோகுளோரிக் அமிலம்’ இருக்கிறது என்றால் நம்புவீர்களா.?



அதை ஒரு பாட்டிலில் பிடித்து அடித்தால் ரவுடிகள் வீசும் ஆசிட் தோற்றுவிடும்.

அந்த அமிலம் கையில் பட்டால் நம் கை ஓட்டையாகும்.!

ஹார்பிக் என்ற நம் கழிப்பறையைச் சுத்தம் செய்யும் வஸ்துவில் 10% இந்த அமிலம்தான் இருக்கிறது.

நம் வயிறு, ஆசிட் வைத்திருக்கும் ரவுடி.!

இவ்வளவு மோசான ஆசிட் உள்ளே இருக்க நம் வயிறு ஏன் இன்னும் பஞ்சராகவில்லை.?

பேன் தலையில் இருந்தால், அந்த ‘இச்சிங்’ உணர்வை நாம் எப்படி உணர்கிறோம்.

இச்சிங்கோ, டச்சிங்கோ நாம் அதை உணர்வது எப்படி.? உணர்த்துவது யார்.? என்று கேட்கும் கேள்விகளுக்கு விடை ஆழ்வார் பாசுரங்களில் எங்கோ புதைந்து இருக்கிறது.

நாம் பெருமாளிடம் வேண்டிக்கொள்கிறோம். பதவி உயர்வு, பணம், வீடு வாசல் வேண்டும்.

தேர்வில் மதிப்பெண், கல்யாணம், வெளிநாட்டு வீசா, சில சமயம் காகிதத்தில் எழுதி ஆஞ்சநேயர் கழுத்தில் கூட மாட்டிவிடுகிறோம்.

**‘உண்டியே உடையே உகந்து ஓடும்’**

என்று ஆழ்வார் சொல்லுவது போல ஓடிக்கொண்டு இருக்கிறோம்.

ஆனால், என்றாவது ? எனக்கு ‘அறிவு இல்லை, அது வேண்டும்’, என்று பெருமாளிடம் கேட்டிருக்கிறோமா? கேட்டதில்லை, காரணம் நம்மை நாமே அறிவுஜீவி என்று நினைத்துக் கொள்கிறோம்.

யாதுமாகி நிற்பவன் அவனே... அவனின்றி ஓர் அணுவும் அசையாது.

# ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 170 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை



பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

**aanmeegamalar.com**



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி



e-magazine
aanmeegamalar.com

கர்மா என்றால் செயல் அல்லது வினை என்பது ஆகும். பொதுவாக இப் பிரபஞ் சத்தில் பிறந்தவர்கள் யாராலும் கர்மா ஏதும் செய்யாமல் இருக்க முடியாது. மனம், வாக்கு, காயம் இவற்றின் மூலம் கூட்டமாகவோ, தனித்தனியாகவோ நாம் எப்போதும் கர்மம் செய்து கொண்டேதான் இருக்கிறோம். நாம் மூச்சு விடுவதுகூட ஒரு செயல் அல்லது கர்மாதான். ஜீவன்கள் செய்யும் ஒவ்வொரு கர்மாவுக்கும் ஒரு கர்ம பலன் உண்டு என்று சாஸ்திரம் கூறுகிறது.

பொதுவாக உலகில் துன்பப்படுவர்களைப் பார்த்தால் நாம் உலக வழக்கில் '' அவன் அவனது கர்மாவை அனுபவிக்கிறான்''. என்று கூறுகிறோம். ஆனால் உண்மையில் அதன் பொருள் 'அவன் தான் செய்த பாவ புண்ணிய கர்ம பலன்களை அனுபவிக்கிறான்' என்பதே ஆகும். நாம் கர்மா, பாவ புண்ணியக் கர்ம பலன்கள் இரண்டையும் பல்வேறு சூழ்நிலையில் பொதுவாக கர்மா என்றே கூறுகிறோம். கர்மாவின் கொள்கைகள் பற்றி மிகவும் விரிவான அளவில் ஆராயப்பட்டு, கர்மா பற்றி கருத்துக்கள் ரிஷிகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதாவது ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை கண்டிப்பாக உள்ளது. அதாவது அறிவியலில் நியூட்டனின் மூன்றாவது விதி கூறுவதுபோல் நாம் செய்யும் ஒவ்வொரு கர்மாவுக்கும் ஒரு கர்ம பலன் உண்டு. அது பாவ கர்மாகவோ புண்ணிய கர்மாகவோ கூட இருக்கலாம். இந்த பிரபஞ்சத்தில் நாம் எதைச் செய்தாலும் அது நமக்கே சுவற்றில் எறிந்த பந்தைப்போல திரும்பி வரும். ஒரு மனிதன் செய்த கர்மாவுக்கும் அதற்கான கர்ம பலனை அனுபவிப்பதற்கும் ஒரு கால இடைவெளி உண்டு. அது மனிதர்களின் ஒரு பிறவியில் மட்டும் செயல்படுவதோடு இல்லாமல் ஜன்ம ஜன்மாந்திரங்களாக பாவ புண்ணியக் கர்மாக்கள் தொடரும். ஒருவன் இறந்தபின் அப்படிப் பின் தொடரக்கூடிய நற்பலன்களை எல்லாம் புண்ணிய கர்மா என்றும் தீய பலன்களை எல்லாம் பாவகர்மா என்றும் கூறுகிறோம்.

கர்மத்தின் பலன்கள் எப்போது எப்படி எந்த அளவுக்கு செயல்படும் என்பது இறைவனின் தீர்மானப்படியே நடக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. எனவே ஆன்மீக வழியில் சென்று இறைவனிடம் பூரண சரணாகதி அடைந்த விடவேண்டும். அவ்வாறு

77

இறைவனிடம் சரணாகதி அடையும்போது நமது செயல்பாடுகளை புண்ணிய கர்மாக்களுக்குத் தக்கவாறு இறைவன் நம்மை வழி நடத்திச் செல்வார். இந்த பாவ புண்ணிய கர்மாவில் இந்த காலம் என்னும் அம்சம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. நேற்று, இன்று, நாளை இந்த மூன்று காலங்கள் பற்றி நாம் சிந்தித்துப் பார்த்தால் ஒன்றிற்கு ஒன்று தொடர்பு உடையதே என்பது புரியும்.



பொதுவாக கர்மாவின் விதிகள் என்பது நமது வாழ்க்கையில் எதுவும் தானாக நடப்பதில்லை. அதேபோல் நமக்குத் தேவையானவற்றை நாம்தான் நகர்த்திச் செல்ல வேண்டும். எடுத்துக்காட்டாக நமக்கு முன்னால் சமையலுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களும் குவித்து வைக்கப்பட்டுள்ளன என வைத்துக் கொள்வோம். நமக்கு உணவு வேண்டுமானால் நாம்தான் அவற்றை எடுத்து பக்குவமாக சமைக்க வேண்டும். பொதுவாக நாம் கர்மாக்களை சிலவற்றை ஏற்றுக் கொண்டால் மட்டுமே மாற்றம் நிகழும். எடுத்துக்காட்டாக குடும்பத்தில் சண்டை சச்சரவு ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம்.

அப்போது அனுபவம் உள்ள கற்றறிந்த பெரியவர்கள் கூறும் அறிவுரைகளைப் புரிந்து ஏற்றுக் கொண்டால் குடும்பத்தில் அமைதி நிகழும். நம்மை நாம் மாற்றிக்கொள்ளும்போது நமது வாழ்க்கையும் நம்மை பின்பற்றி மாறும். எடுத்துக்காட்டாக நாம் எதற்கு எடுத்தாலும் கோபப்பட்டுக்கொண்டே இருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். ஒரு காலக்கட்டத்தில் கோபப்படுவது தவறு என்று உணர்ந்து நாம் பொறுமையாக மாறும்போது நமது வாழ்க்கையில் வியக்கத்தக்க மாற்றம் நிகழ்வதைக் காணலாம். அதனால் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.

பொதுவாக நம் வாழ்வில் நிகழும் அனைத்துக்கும் நாமே பொறுப்பு என்பதை உணர வேண்டும். எடுத்துக்காட்டாக நாம் நடந்து செல்லும்போது காலில் முள் தைத்து விட்டது என்று வைத்துக்கொள்வோம். அதனால் துன்பப்படுவது நாம்தான். நாம் கவனமாக பொறுமையாக நடந்து சென்றால் காலில் முள் தைப்பதற்கு வாய்ப்பில்லை. மனிதர்கள் ஒரே நேரத்தில் இரு வேறு விஷயங்களை சிந்திக்க முடியாது. நமது நடவடிக்கைகள் எல்லாம் நம் சிந்தனையும் செயலையும் பிரதிபலிக்க வேண்டும். நம்முடைய கடந்த காலத்தையே நினைத்து கவலைப்பட்டுக்கொண்டு இருந்தால் நமது நிகழ்காலம் கடந்து சென்று விடும். நமது சிந்தனை செயல்பாடுகள் எல்லாம் நிகழ்காலத்தில் இருக்கும்போது நாம் தேடும் மன அமைதி கிடைக்கும்.

நமது பாவ புண்ணியக் கர்ம பலன்கள் அனைத்தும் நாசம் அடையும்போது நாம் ஆத்ம ஞானம் பெறலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் ஆத்ம ஞானம் அடைவதால் என்ன பலன் ஏற்படும்? என்று சிந்தித்துப் பார்த்தால் நாம் இவ்வுலகில் வாழும்போது நமக்கு ஏற்படக்கூடிய இன்ப துன்பங்களில் இருந்து விடுதலை அடையலாம். அதனால் நாம் விரும்பும் தேடும் மன அமைதி நம்மைத் தேடி வரும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

பொதுவாக மனிதன் ஆத்மஞானம் அடைவதை ஜீவன் முக்தி என்று சாஸ்திரம் கூறுகிறது. ஜீவமுக்தி நிலை அடைந்தவர்கள் இந்த உலகில் மீண்டும் பிறப்பதில்லை. ஜீவமுக்தி

aanmeegamalar.com e-magazine

நிலையில் அனைத்துக் கர்மங்களும் நாசம் அடைந்து விடுவதே அதற்குக் காரணம் ஆகும். அவ்வாறு கர்ம நாசம் அடைவதை விதேக முக்தி என்றும், மனம், வாக்கு, காயம் என்பவற்றின் மூலம் மனிதர்கள் செய்யக்கூடிய செயல்பாடுளைத் திருஷ்டப்பலன்கள் என்றும், அதிர்ஷ்டப்பலன்கள் என்றும் சாஸ்திரம் கூறுகிறது..

திருஷ்டப்பலன்கள் என்பது நமது கண்ணுக்குத் தெரியும் பாவ புண்ணியக் கர்ம பலன்கள் என்றும், அதிர்ஷ்டப்பலன்கள் என்பது நமது கண்ணுக்குத் தெரியாத கர்மப் பலன்கள் என்றும் கூறப்படுகிறது. அதிர்ஷ்டப்பலன்கள் பாவம், புண்ணியம் என்று பிரிக்கப்படுகிறது. நல்ல எண்ணங்கள், நல்ல செயல்பாடுகள் அனைத்தும் புண்ணியப் பலன்கள் என்றும், தீய எண்ணங்கள், தீய சொற்கள் தீய செயல்பாடுகள் போன்றவை பாவப்பலன்கள் என்றும் கூறப்படுகிறது. மனிதன் சாஸ்திரத்தில் தெரிவிக்கபட்டுள்ள செயல்பாடுகளை மட்டும் கடைபிடிப்பது புண்ணிய கர்மப் பலன்கள் என்றும், சாஸ்திரத்தில் தெரிவிக்கப்படாத செயல்பாடுகளில் ஈடுபடுவது பாவ கர்மப் பலன்கள் என்றும் கூறப்படுகிறது.

பொதுவாக பாவ கர்மப்பலன்கள் அனைத்தும் மனிதர்களுக்குத் துன்பங்களை துயரங்களையும் கொடுத்து தீரும். அதேபோன்று புண்ணியப்பலன்கள் அனைத்தும் மனிதர்கள் இன்பங்களை சுகமாக வாழ்ந்து அனுபவவிப்பதன் மூலம் தீரும். ஒரு ஜீவனிடத்தில் உள்ள பாவபுண்ணியக் கர்மாக்களின் குவியலை சஞ்சித கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. சஞ்சித கர்மா தத்துவத்திலிருந்து வெளிப்பட்ட பாவ புண்ணிய கர்மாக்களுக்கு பிரார்த்தம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஒரு ஜீவன் பிரார்த்த கர்மாவை அதாவது இன்ப துன்பங்களை அனுபவவிக்கும்போது புதிதாக ஏற்படக்கூடிய பாவ புண்ணியக் கர்மாக்களை சேர்த்துக்கொள்வதற்குப் பெயர் ஆகாமி கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஒரு ஜீவனின் பாவ புண்ணியக் கர்மாக்கள் அனைத்துக்கும் அவரவர்களே



பொறுப்பு ஆகும். பாவ புண்ணிய கர்மாக்களுக்கு மற்றவர்களோ, நீ வணங்கும் தெய்வங்களோ, நவக்கிரகங்களோ பொறுப்பு அல்ல. அதாவது இப்பிரபஞ் சத்தில் மனிதப்பிறவியில் நமக்குக் கிடைத்துள்ள வாழும் சூழ்நிலை, பெற்றோர்கள், மனைவி மக்கள் உற்றார், உறவினர்கள் ஆகியவை அவரவர்கள் செய்த பாவபுண்ணியக் கர்மப்பலன்களின் அடிப்படையில்தான் அமைகின்றன. இதனை நன்கு உணர்ந்து கர்ம பலன்கள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது மனிதர்கள் இதில் யாரையும் குற்றம் குறைகள் சொல்வதற்குத் தோன்றாது.

இந்த உலகத்தில் ஏற்பட்டுள்ள வேற்றுமைகளுக்கும் உயர்வு தாழ்வுகளுக்கும் அவரவர்களே காரணம் அல்லது பொறுப்பு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் புரிந்து கொள்ளும்போது நாம் உடலளவில் துன்பப்பட்டாலும் நாம் மனதளவில் துன்பப்படுவதில்லை. அவ்வாறு துன்பப்பட்டாலும் அத்துன்பங்கள் நமது வாழ்க்கையை எந்தநிலையிலும் பாதிப்பது இல்லை. நமது துன்பங்களுக்கு எல்லாம் நமது கர்மப்பலன்கள்தான் காரணம் என்று நாம் மனபக்குவம் அடைந்து விடுகிறோம். அவ்வாறு நாம் மனபக்குவம் அடையும்போது நாம் தேடும் விரும்பும் மன அமைதி நம்மையும் அறியாமல் கிடைத்து விடும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

FREE

# 173 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...



eBook FREEDOWNLOAD

**aanmeegamalar.com**



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com